# தமிழ்க் கீர்த்தனைகள்

உ. வே. சா.
நூலகச் சுவடி

பதிப்பாசிரியர்

**ஆர். வசந்தகல்யாணி** எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்

**நடன. காசிநாதன்** எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு

*தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை*
*சென்னை-600 113*

***1 9 9 3***

முதற் பதிப்பு—1993 ( 500 பிரதிகள் )
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 116

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்க் கீர்த்தனைகள்

பதிப்பாசிரியர்
ஆர். வசந்தகல்யாணி எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம்.ஏ.
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

விலை: ரூ. 37/=

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# முன்னுரை

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இசைப் பாடல்கள் யாவும் தெலுங்கில் இயற்றப்பட்டு வேகமாகப் பரவி வந்த நிலையில் ஆங்காங்கு இருந்த ஜமீன்தார்களின் ஆதரவில் இசைக் கலைஞர்கள் சிலர் தமிழிற் பாடல்கள் இயற்றித் தம்மை ஆதரித்தவரையும், இறைவனையும் போற்றும் வகையில் தமிழ் மொழிக்கும், இசைக்கும் பெருந்தொண்டாற்றினர். அவர்களுள் கனம் கிருஷ்ணையர், பாலகவி சண்பகமன்னார் போன்ற தமிழிசை வல்லுநர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். குடத்திலிட்ட விளக்காய் இருந்த அவர் தம் கீர்த்தனை களையும், புகழையும் குன்றிலிட்ட விளக்காய்க் காண ஆர்வம் கொண்ட உ. வே. சா. அவர்கள் "என்பால் சிதிலமாயுள்ள பிரதி களில் உள்ளனவும், பலசமயங்களில் பலர் முகமாக அறிந்தனவு மாகக் கிடைத்தவற்றைத் தொகுத்து வைத்துள்ளேன்" என்று கூறித் தொகுத்து வைத்திருந்த அருந்தமிழ்ப் பாக்களை இத்துறை நூலாக வெளியிட்டுள்ளது. இவற்றில் சிலவற்றை உ. வே. சா அவர்களே ஆங்காங்கு சில நூல்களில் பதிப்பித்துள்ளார். சில பாடல்கள் வாய்மொழியாகவே பிரபலமானவை. இவை தமிழுக்கு அணியாவ தோடு வரலாற்றுக் குறிப்புகளைத் தருவனவாகவும் அமைந்துள்ளன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உடையார் பாளையம், அரியலூர் ஜமீன்தார்கள், கபித்தலம் இராமபத்திர மூப்பனார், அவர் தந்தை முத்தைய மூப்பனார், இஞ்சிக் கொல்லை வேங்கட ராமன் போன்றவர்களைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. இசைக் கலைஞர்களுக்கு அவர்கள் கொடுத்த ஆதரவும் மதிப்பும் இதன் வழி நமக்குப் புலனாகின்றன. அகச்சுவைப் பாடல்களாகவும், தத்துவப் பாடல்களாகவும், இறைவன் பெருமையைக் கூறுபவை களாகவும், இவர்களை ஆதரித்தவர்களைப் பற்றியனவாகவும் அமைந்துள்ளன. இப்பாடல்கள் இசையோடு பாட இனிமை மிக்கவை.

"தமிழிற் கீர்த்தனங்களிற் பெரும்பாலான இயற்றமிழிலக்கண அமைதி இல்லாதனவாக இருக்கின்றன. சங்கீதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பெரியோர்களிற் பலர் தம்முடைய முழுநோக்கத் தையும் சங்கீதத்திலேயே நிறுத்தி விடுவதால் அவர்களுடைய இயற்றமிழறிவு சுருங்கியதாக அமைகின்றது. தாமே கீர்த்தனங் களை இயற்றும் பல சங்கீத வித்துவான்கள் எதுகையும் மோனை

யும் பொருத்தமாக இருந்தால் போதுமென்ற அளவிலே தங்கள் கீர்த்தனங்களை அமைத்திருக்கின்றனர். சிலரே இயற்றமிழறிவும் நன்கு பெற்று நன்மணம் பெற்ற பொன்மலர் போன்ற கீர்த்தனங் களை இயற்றியுள்ளார்கள். கனம் கிருஷ்ணையருடைய கீர்த்தனங் களில் இலக்கணப் பிழைகள் உள்ளன. வாக்கிய முடிபுகள் சரியாக இரா. ஒருமை பன்மைகள் மயங்கி வரும். இவ்வளவு குறைபாடுகள் உடையனவாக இருப்பினும் அவற்றில் வர்ண மெட்டுக்கள் அருமையான அமைப்பை உடையன. சங்கீத வித்துவான்களால் பெரிதும் பாராட்டப் படுவன. ஆதலால் இக்கீர்த்தனங்களைச் சங்கீதக் கண் கொண்டு பார்ப்பதோடு நிற்றல் நலம். தமிழ் சாகித்தியங்களில் இவற்றைப் போன்ற சங்கீதப் பொருத்தமுள்ள கீர்த்தனங்கள் மிகச் சிலவே'' என்று உ. வே. சா அவர்கள் கூறி யுள்ளதை நினைவில் கொண்டு பாடலினிமையில் திளைக்க வேண்டும். இந்நூலில் நான்கு ஆசிரியர்கள் இயற்றியனவாகப் பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவர்தம் வரலாற்றினையும், பாடற் சிறப்பினையும் காண வேண்டியது அவசியமாகின்றது.

## முத்துத் தாண்டவர்

''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க''

வேண்டுமென்ற அடிப்படையில் எத்தனையோ அடியார்கள் விரும்பி னார்கள். நல்விருளில் நட்டம் பயின்று ஆடும் நாதன் தில்லைக் கூத்தன் அவ்வடியார்களின் அல்லற் பிறவிகளை அறுத்த வரலாறும் உண்டு. அந்த வரிசையில் இடம் பெறுபவர் முத்துத்தாண்டவர், இவர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிறந்த இசைத் தமிழ்க் கவிஞர். திருஞானசம்பந்தர் தோன்றிய சீர்காழிப் பகுதியில் சிவனுக்குத் தொண்டு செய்யும் குலத்தில் தாண்டவன் என்ற இயற் பெயரோடு தோன்றியவர். இவர் இயற்றிய இரண்டு பாடல்கள் இந்நூலில் உள்ளன. சிதம்பரநாதனின் ஆடலைக் கண்டு பரமானந்தம் அடைந்ததும், நடேசனைப் பணிந்து பாடி வன்மலங்கள் நீக்கிபருள வேண்டியும், இறைவனின் பல திருக் கோலங்களைச் சிறு சொற்களில் வருணித்தும் பாடியுள்ள கீர்த் தனங்கள் எளிமையானவை, இனிமையானவை, சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பொதிந்தவை

*''கங்கைமதி அரவசையக் காதிற்குழை அசைய*
*செங்கைமழு துடிஅசைய செய்யஜடை அசைய*
*பொங்குபுலி யதளசைய பொற்பாதச் சிலம்பசைய*
*மங்கைசிவ காமவல்லி மகிழ நடம்புரியும்''*

என்ற பாடல் வரிகள் ஆடவல்லானின் ஆடல் அழகை நம் கண் முன் நிறுத்துவனவாக உள்ளன.

**கனம் கிருஷ்ணையர் :** இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசைக்கலைஞர். உ. வே. சாமிநாதையரின் பாட்டியின் அம்மான். இவருடைய இயற்பெயர் கிருஷ்ணையர் என்பது. இவர் உடையார்பாளையம் வட்டத்திலுள்ள திருக்குன்றம் என்ற ஊரில் பிறந்தவர். இவரும் இவருடைய உடன் பிறந்தவர்களும் தம் தந்தை இராமசாமி ஐயரிடத்திலும், அரியலூரிலிருந்த சண்பக மன்னார் என்னும் ஸ்ரீவைஷ்ணவப் பெரியாரிடமும் தமிழையும் சங்கீதத்தையும் கற்றனர். மேலும் இசையில் தேர்ச்சி பெற்றுத் தஞ்சாவூர் அரண் மனையில் சங்கீத வித்துவான்களாக இருந்தனர். கிருஷ்ணையர் கபித்தலம் இராமபத்திர மூப்பனாரின் ஆதரவில் சங்கீதமார்க்கங்க ளான கனம், நயம், தேசிகம் என்ற மூன்றனுள் ஒன்றாகிய கன மார்க்கத்தில் பயிற்சி பெற்று, அம்மார்க்கத்தில் மிகச் சிறந்த வன்மை பெற்ற பொப்பிலி கேசவையாவே வியந்து பாராட்டும் அளவில் பாடினார். கனம் கிருஷ்ணையர் எனப் பாராட்டப் பட்டார்.

[கனமார்க்கம் என்பது மூலாதாரத்திலிருந்து கம்பீரமான ஒலியை உண்டாக்கிப் பாடுவதென்றும், தொடங்கும் போது அந்த ஒலி ஹுங்கார சப்தத்தோடு எழுமென்றும், ஆரோகண அவரோகணத் தில் பல வகையான சங்கதிகள் வரும்படி பாடுவதென்றும் அங்க சேஷ்டைகள் இல்லாமல் பாடவேண்டும் என்றும் சொல்லுவர்.] இவர் பெரும்பாலும் அகச்சுவைப் பாடல்களாக எழுதியுள்ளார்.

*''கண்கள் கலங்கக் கலசம் குலுங்கக்*
*கலைகள் அவிழ்ந் தவிழ்ந்து நலுங்கத்*
*தண்களபக் குங்கு மந் துலங்க*
*தங்க பாத சரங்கிலு கிலுங்க''*

கச்சி கல்யாணரங்களை எண்ணித் தலைவி வாடியதாக அவர் பாடுகின்றார். இறைவன் மேல் காதல் கொண்ட தலைவியாகவும் அவர்

"காதலென் னெஞ்சினுள் மெத்தவே யாறுதே
காமன் கணையுங் கனன்று முன்னேசேருதே
வேதனை யாகமெய் மெலிந்து சோருதே
மேலென்ன செய்வேனடி மய்யல் மிறுதே!

என்று பாடியுள்ளார். தம்மை ஆதரித்த உடையார்பாளையம் ஜமீன்தார்களான சச்சி கல்யாணரங்கர், கச்சி ரங்க உடையார் ஆகியோரைப் புகழ்ந்து பாடியுள்ளார். இராமபத்திர மூப்பனார் என்பார் கிருஷ்ணையருடைய தந்தையார்க்கு நண்பராகிய கபித்தலம் முத்தைய மூப்பனாருடைய குமாரர். இவருடைய ஆதரவினைப் பெரிதும் பெற்றதால் "எங்கள் மகிபன் முத்தய்யனருள் மகிபாலன் கன்னல் மொழியெல்லார்க் கிராமபத்திர ந்திரசாமி" என்று புகழ்ந்துள்ளார். இன்னும் "மாதே அவர் செய்த', "அன்னமே நானென்ன செய்வேன்" முதலிய கீர்த்தனைகளையும் அவர் பேரில் பாடியுள்ளார். திருக்குன்றம் தாம் பிறந்த ஊராகையால் பல கீர்த்தனங்களை அவ்வூர் இறைவன் சௌந்திரராஜப் பெருமாள் மீது இயற்றிப் பாடியுள்ளார். குடந்தை அருகே உள்ள திருச்சேறை என்ற ஊருக்குச் சென்ற போது இஞ்சிக் கொல்லை வெங்கடராமையா என்பவர் இவரை மிகவும் உபசரித்ததால் அவர் புகழையும் சேர்த்து அத்தலத்திற்கே உரிய பஞ்சசாரமென்று சொல்லப்படும் சாரநாதர், சாரநாயகி, சாரக்ஷேத்ரம், சாரபுஷ்கரணி சாரவிமானம் என்னும் பெயர்களையும் அமைத்து "முன்னழகும் பின்னழகும்" என்ற கீர்த்தனையை இயற்றியுள்ளார். அது போன்று மன்னார்குடி சென்றபோது அங்கு கோயில் கொண்டிருக்கும் இராஜகோபாலசாமி மீது "மன்னனார் வலைவீசி" என்ற பாடலையும் பாடினார். காவிரிக் கரையில் அமைந்துள்ள கிருஷ்ணராஜபுரம் சென்றிருந்த போது திருக்கண்மாலீஸ்வர ஐயர் என்ற தர்ம கர்த்தாவும் பிறரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க "திருக்கண் மாலீஸ்வரர்க்குகந்த தேவியே" என்ற பாடலைப் பாடினார். இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் திருக்கண் மாலீஸ்வரர். திருவையாறு சென்ற போது தியாகையரின் வேண்டுகோள்படி "சும்மா சும்மா வருகுமா சுகம்" என்ற பாடலைப் பாடினார். ஒருமுறை திருவொற்றியூர் சென்றபோது "திருவொற்றியூர்த் தியாகராஜர் சித்விலாசநாதனடி" என்ற கீர்த்தனையைப் பாடினார்.

கிருஷ்ணையர் சிலகாலம் உடையார்பாளையம் கச்சி ரெங்க உடையார் தம் ஆஸ்தான வித்துவானாக இருந்தார். இவரது ஆதரவும், அன்பும் கிருஷ்ணையரை வேறெங்கும் செல்லாது உடை

யார் பாளையத்திலேயே தங்கச் செய்து விட்டது. கச்சி ரெங்க உடையாரின் கொடைச் சிறப்பையும் அன்பையும் பல பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். கச்சி ரெங்கருக்குப் பின் அவரது மகன் கச்சி கல்யாண ரங்கர் இவரை ஆதரித்தார்.

"வணிதமான சௌந்தர ராஜப் பெருமான்
மகாமண்டபங் கட்டி வைக்கும் நின்போல் ராஜ
னுண்டோ

என்று கச்சி கல்யாணரெங்கர் செய்த திருப்பணியைப் புகழ்ந்தும்,

"அல்லலில் லாமலே எனை யாதரித்துக் காப்பாற்றும்
அகளங்கனே சதுரங்க துரங்கனே இங்கிதமாய்"

என்று தன்னை ஆதரித்ததைப் புகழ்ந்தும் பாடியுள்ளார். மிகத் தளர்ந்த நிலையில் பாடிய பாடல் "கொடுத்து வைத்தது வருமோ". இறப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன் தாம் சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானை வணங்கியதாகக் கனவு கண்டார். கண் விழித்தவுடன் பந்துவராளி இராகத்தில் 'தில்லையப்பா உனது பஞ்சாட்சரப்படியில்' என்ற பாடலைப் பாடினார். அறுபது வயது வரை வாழ்ந்த இவரின் அருகிருந்து பணி செய்து இசை கற்றுக் கொண்டவர்தாம் தமிழ்த் தாத்தாவின் தந்தையார்.

**முத்துவேலவர் :** முத்துவேலவர் என்ற முத்திரையுடன் பாடல்கள் உள்ளன. பாடலின் இறுதியில் முத்துவேலவர் என்று முடிவதால் தனியொரு ஆசிரியராக இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. உ.வே.சா. அவர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புகளில் வரலாறு ஏதும் கூறிச் செல்லவில்லை. முத்துவேலவர் என்று முடியும் இப் பாடல்கள் யாரால் இயற்றப்பட்டன என்பதும் குறிக்கப்படவில்லை. கையெழுத்துப் பிரதிகளில் பாடலுக்கு மேல் இயற்றியவர் பெயர் பெரும்பாலும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் முத்துவேலவர் என்ற முத்திரையுடன் முடியும் பாடல்களிலும், இன்னும் சில பாடல்களிலும் இயற்றியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. கையெழுத்துப் பிரதியில் இன்னும் அச்சாகாத பாடல்கள் உள்ளன. அப்பாடல்களை ஊன்றிப் படித்தபோது கனம் கிருஷ்ணையரே முத்துவேலவர் என்ற முத்திரையுடன் பாடல்கள் இயற்றியுள்ளமை தெரிய வந்தது. உ. வே. சா அவர்களின் சேகரிப்பில் கனம் கிருஷ்ணையருடைய பாடல்களாகக் குறிக்கப்பட்டுள்ள சில கீர்த்தனங்கள் முத்துவேலவர் என்று முத்திரையுடன் காணப்பட்டதால்

இப்புத்தகத்தில் அச்சாகியுள்ள பாடல்களும் கனம் கிருஷ்ணைய ருடையதே என்று முடிவு செய்ய வாய்ப்பாகியது. மேலும் கனம் கிருஷ்ணையர் முருகனை வணங்கும் வழக்கமுடையவர் என்பதாலும் இப்பாடல்கள் கனம் கிருஷ்ணையர் இயற்றியவையே என்ற முடிவுக்கு வரலாம். பாடல்களுள் ஏழு உமையன்னையைப் போற்றுவ தாயும் மூன்று பாடல்கள் முருகனைப் போற்றுவதாயும் உள்ளன.

> ''வெற்றிவேல் கையில் பிடித்து முத்துவேலவரைக் களித்துப் பெற்றவளே ஆதிசக்தி சொக்கேசர் பங்கில் வாழ் நற்றவமே''

என்பது முருகனை உமையன்னை உலகிற்களித்ததை இயல்பாகக் கூறும் வரிகளாம். இயல்பான உலக வழக்குச் சொற்களைக் கொண்டு முருகனை வணங்கிப் பாடியிருப்பதையும்

> ''அல்லும் பகலும் தொழுதுன தடியிணை வணங்கினேன் ஒரு வாக்குச்
> சொல்லவுந் தயவில்லையோ நான்சொந்த அடிமையல்லவோ
> கல்லுமனதோ அல்லாமலென்ன கவடோ கருணைக்கிவன் பாத்திரம்
> அல்லவென்று தள்ளியே பராமுகமா இருப்பதுகப்போ வடிவேலனே''

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**சண்பக மன்னார் :** அரியலூர் ஜமீனில் சண்பகமன்னார் என்னுங் குடிப்பெயருடைய ஒரு பரம்பரையினர் ஆஸ்தான வித்து வான்களாக இருந்து வந்தனர். அவர்கள் சண்பகாரண்யம் எனப் படும் இராஜமன்னார் கோயிலிலிருந்து வந்தவராதலின் அவர்களுக்கு அந்தக் குடிப்பெயர் அமைந்தது. மன்னார் என்பது அங்கு கோயில் கொண்ட இறைவனின் பெயர். இளமையிலேயே செய்யுளியற்றும் ஆற்றல் அந்தப் பரம்பரையினருக்கு இருந்ததால் அவர்களுக்கு பால சரஸ்வதி, பாலகவி என்னும் பட்டங்கள் அளிக்கப்பட்டு வழங்கப் பட்டன. சண்பகமன்னார் என்னும் பொதுப் பெயரையே சிறப்புப் பெயராகப் பெற்ற இவரது இயற்பெயர் ஸ்ரீநிவாசையங்கார். தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளில் வல்லவராக இருந்தார். இசையிலும் பயிற்சி மிக்கவர். அத்வைத சாத்திரத்தில் தெளிந்த ஞானமுடையவர். இவரிடம் பாடம் கேட்க வருபவர்கள் பல கோயிற் பணிகளையும், அன்னசத்திரம், தடாகம் அமைத்தல் போன்ற தருமங்

களையும் செய்யுமளவு இவருடைய நோக்கும் போக்கும் அமைந் திருந்தன. தம்மை ஆதரித்த ஜமீன்தார் மீதும் இறைவன் மீதும் பல செய்யுட்களையும் தனிக் கீர்த்தனங்களையும் வடமொழியிலும் தமிழிலும் பாடியுள்ளார். ஜமீன்தார் நவராத்திரி விழாக் கொண்டா டுவதைச் சிறப்பித்து 'நவராத்திரி நாடகம்' என்ற நூலையும் இயற்றி யுள்ளார். திருக்குடந்தைச் சாரங்கபாணி மீது நொண்டி நாடகம் இயற்றினார். அவருடைய புலமையும் ஞானமும் இன்றளவும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவருடைய பாடல்களாகப் பதி னொரு பாடல்கள் இந்நூலில் உள்ளன.

**பால சரஸ்வதி :** *கச்சி ரங்கப்ப உடையார் (கி.பி. 1801-1835) காலத்தில் திருப்புறம்பயம் வீரசைவராகிய பாலசரஸ்வதி சுப்பிர மணியக் கவிராயர் என்பவர் அரசு வித்துவானாக இருந்தார். கச்சி ரங்கப்ப உடையாருக்குப் பின் வந்த கச்சி கல்யாணரங்கர் (கி பி. (1842-1885) காலம் வரை பாலசரஸ்வதி சுப்பிரமணியக் கவிராயர் இருந்தார். இவர் பாடிய பாடல் ஒன்று உள்ளது.*

> *''மாட்சிமையான புறம்பிய நகரில் வாசனே சுப்பிரகாசனே*
> *தாழ்ச்சி இல்லாமல் அன்பர்க்கருள் புரியும் தயாபரி''*

*என்று தம் ஊர் இறைவனை வேண்டுவதாக உள்ள இப்பாடலில் சிவனின் திருவுருவக் கோலங்கள் குறிப்பாகவும் அழகாகவும் ஒரே வரியில் காட்டப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியது.*

*மேற்கூறியவர்கள் பாடிய பாடல்கள் தவிர இயற்றியவர் பெயர் தெரியாது நான்கு பாடல்கள் உள்ளன. இந்நான்கு பாடல்களைப் படித்த பொழுது ''இவனுக்குச் சரியான துரை உலகி னிலுண்டோ'' என்ற பாடல் கனம் கிருஷ்ணையரால் தஞ்சை மராட்டிய மன்னன் (கி.பி. 1832-1855) சிவாஜி மகாராஜாவைப் போற்றிப் பாடப்பட்டதாகக் கொள்ள இடமுண்டு. ஏனென்றால் தஞ்சை அரசர் முன்னிலையில் கனமார்க்கத்தில் மிகச்சிறந்த வன்மை பெற்ற பொப்பிலி கேசவையாவே வியந்து பாராட்டப் பாடியுள்ளார் கனம் கிருஷ்ணையர் என்பதால் மேற்கூறிய பாடலை இவருடைய பாடலாகக் கொள்ளலாம். இப்பாடல் வரிகளில் பல நாட்டவரும் இவ்வரசர்க்கு விலை மதிப்பில்லாத பொருட்களை வெகுமதியாக அளித்துள்ளதைத் தெளிவாகச் சுட்டியுள்ளார்.*

"மச்ச கெச்சரர் மகதர், குத்தர்ரெங்கர்
வங்க சிங்களத் தாரும்
கொச்சிப் பப்பரர் கௌடர்ட டங்கணர்
மார்வாடி கொங்கணத் தாரெல்லாரும்
வச்சிரப் பதக்கமாலை விலையில்லா நவமணிகள்
ஒருக்காலே கொணர்ந்து வைத்து
இச்சகம்புகழ் சம்ரட்சணர் துரந்தரன் னென்னும்
இணையடி துணை யெனவே''

என்ற வரிகள் வரலாற்றுக் கண்ணோடு நோக்கத்தக்கவை.

ஆகச் சிறு சிறு கீர்த்தனைகளாக இருப்பினும் மேற்குறித்த செய்திகளையெல்லாம் தொகுத்து நோக்கும் போது தமிழ் இசை உலகிற்கு இவை பெரிதும் புகழ் சேர்ப்பவையாக உள்ளன என்பதில் ஐயமில்லை. மேலும் அவ்வக் கால ஜமீன்தார்கள் இத் தமிழ்க் கவிஞர்களைப் போற்றிப் பேணி இருப்பது சங்கக்கால மரபை நினைவூட்டுவதாக உள்ளது.

— ஆர். வசந்தகல்யாணி

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு 1981-ஆம் ஆண்டு, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்தியது. அம்மாநாட்டினையொட்டித் தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய ஓலைச்சுவடிகளில் இதுவரை வெளி வராத இலக்கியங்கள் காணப்பெறின் அவற்றை நூலாக அச்சிட்டு வெளிக் கொணர்தல் வேண்டும் என்று அரசு திட்டமிட்டது. அத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இதுவரை வெளியிடப்படாது இருந்த சில நூல்களை ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிட்டது அவற்றுடனேயே அச்சான "தமிழ்க் கீர்த்தனைகள்" என்னும் நூல். சில நிர்வாகக் காரணங்களால் இதுவரை பூர்த்தி செய்து வெளியிட முடியாத நிலையில் இருந்தது. அந்நூல் தற்போது பதிப்பா சிரியரால் ஆய்வு அடிப்படையில் முன்னுரை எழுதப்பெற்று வெளிக் கொணரப்படுகிறது. இந்நூலினுடைய காகிதச்சுவடி சென்னை உ.வே சா நூலகத்தைச் சார்ந்தது. இச்சுவடி கொடுத்துதவிய சென்னை உ. வே. சாமிநாதையர் நூலகத்திற்கு இத்துறையின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை 1981 லேயே அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து அச்சிடச் செய்த இத்துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களுக்கும் எனது பணிவான நன்றி.

கீர்த்தனைகள் எழுதும் மரபு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு தான் ஏற்பட்டிருக்கிறது. கீர்த்தனையில் முக்கிய அங்கங்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகியவையாகும். கீர்த்தனை களில் இசையைவிட சாகித்யத்துக்கே அதிக முக்கியத்துவம் தரப் படும். தமிழ்க் கீர்த்தனைகளை இயற்றியவர்களில் அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ணபாரதி, முத்துத்தாண்டவர், பாபநாசம் சிவம் ஆகியோர் முக்கியமானவர்களாகக் கருதப்படுவர்.

தற்போது பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலில் முத்து தாண்டவர் கிருஷ்ணையர், முத்துவேலவர், சண்பகமன்னார் ஆகிய புலவர்கள் இயற்றிய கீர்த்தனைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கீர்த்தனைகள் சற்றேறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முற்பட்டவைகயாக இருக்கலாம்.

இக்கீர்த்தனைகளின் வாயிலாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உடையார்பாளையம் மற்றும் அரியலூர் ஜமீன் தார்கள் பற்றியும், கபித்தலம் இராமபத்திர மூப்பனார், அவர் தந்தை முத்தைய மூப்பனார், இஞ்சிக்கொல்லை வேங்கடராமன் போன்ற சில புரவலர்கள் பற்றியும் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இசைவாணர்களையும், இசைக் கருவிகளை மீட்டும் வல்லுநர்களையும் அரசாளும் மன்னர்கள் போற்றிப் பாதுகாப்பது என்பது சங்க காலந் தொட்டு இருந்து வரும் நெடிய மரபு ஆகும். அம்மரபின்படி கி.பி. 19-ம் நூற்றாண்டிலும் உடையார்பாளையம் அரியலூர் பகுதியை ஆட்சி செய்த பாளையக்காரர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பாராட்டி இருக்கிறார்கள் என்பது இக் கீர்த்தனைகள் மூலம் நமக்குத் தெரிய வருகிறது. மேலும் 19-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தினுடைய சமுதாய அமைப்பு, வள்ளண்மை, கல்வியின் சிறப்பு ஆகியவை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் அப்புலவர்களது பாடல்களால் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. புலவர்கள் மிகவும் எளிய, இனிய தமிழைக் கையாண்டு இக்கீர்த்தனங் களை இயற்றியுள்ளதால் இற்றைப் படிக்கும் சாதாரண கல்வி யறிவுடைய மக்களும் எளிதில் புரிந்து மகிழ்ச்சியில் திளைக்க முடிகிறது. இக்கீர்த்தனங்களை அழகுறத் தொகுத்துப் பதிப்பிந் திருக்கின்ற திருமதி. ஆர். வசந்தகல்யாணி, கல்வெட்டாய்வாளர் அவர்களுக்கும், பதிப்பில் உதவிபுரிந்த திரு. அ. இராசேந்திரன் அவர்களுக்கும் இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுள்ள அச்சகப் பிரிவினர் அனைவருக்கும் எம் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

**நடன. காசிநாதன்,** எம்.ஏ.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

# உள்ளுறை


| எண். | பல்லவியின் துவக்கம் | பக்கம் |
|---|---|---|
| | **முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள்** | |
| 1. | அம்பர சிதம்பர சதானந்த | 2 |
| 2. | உனை நம்பினேன் ஐயா | 3 |
| | **முத்துவேலவர் கீர்த்தனைகள்** | |
| 3. | இன்னந் தயவில்லையா அம்பா | 5 |
| 4. | குத்தம் எத்தனையோ | 7 |
| 5. | தினம்தினம் உன்பாதத்தை | 8 |
| 6. | உன் சன்னதியே | 9 |
| 7. | வேலவனே தெய்வம் | 10 |
| 8. | ஈஸ்வரி ஜகதம்பா | 11 |
| 9. | முருகையனே பன்னிருகையனே | 12 |
| 10. | இந்தநேரத்தில் போகச்சொன்னீரே | 14 |
| 11. | ஆதிசக்தி ஜகத்காரணி | 16 |
| 12. | கிருபை பண்ணம்மா | 17 |
| | **கனம் கிருஷ்ணையர் கீர்த்தனைகள்** | |
| 13. | கொடுத்து வைத்தது வரும் | 20 |
| 14. | வாராரோ வந்து முத்தந் தாராரோ | 21 |
| 15. | பச்சிளந் தேமல் படர்ந்து | 23 |
| 16. | அன்னமே நான் என்ன செய்வேன் | 25 |
| 17. | ரெங்கநாயக | 27 |
| 18. | நீயல்லாமல் வேறேயுமுண்டோ | 29 |
| 19. | திருக்கண் மாலீசுவரருக்கு | 20 |
| 20. | மன்னனார் வலைவீசி | 31 |
| 21. | சைதன்னிய விக்கிரகமே | 32 |
| 22. | மனமே யெந்நாளும் | 33 |
| 23. | உன்பதமே சதாகதி | 34 |
| 24. | இன்னம் மனம் | 36 |
| 25. | படியளக்கும் பெருமானென்று | 37 |
| 26. | முன்னழகும் பின்னழகும் | 38 |
| 27. | வேலவரே உமைத்தேடி | 40 |
| 28. | ஜெகஜனனி சுகபாணி | 41 |
| 29. | மாதே அவர் செய்த | 42 |
| 30 | காமதேனு ஐந்தருவென | 44 |
| 31 | தில்லை சிதம்பர | 45 |
| 32 | தில்லையப்பா | 47 |

33. லட்சுமி சமேத 48
34. நல்ல நல்ல நிலவும் 49
35. சும்மா சும்மா வருகுமா சுகம் 50
36. பூவராகரே 51
37. இந்து ரவியைப் போல 53
38. திருவொற்றியூர்த் தியாகராசர் 55
39. மகமேரு மகராஜனே 56
40. சக்கிரபாணி சாமி 57
41. பணிவிடைக்காகவே 58
42. சுந்தரமாகவே 60
43. வகுளவனவாசரே 62

பாலகவி சண்பகமன்னார் கீர்த்தனைகள்

44. நாமகள் கொலுவிருக்கும் 64
45. பாரதியே அருள்புரிந்து 66
46. இனித் தாமதம் ஏனம்மா 67
47. திவ்ய தரிசனங் கண்டு 69
48. பரமபத வாசலில் 71
49. தேவாதிதேவா 72
50. மதனகோபாலா 73
51. மதன் கணையாலே 75
52. திருமருமார்பா 76
53. புருஷோத்தமன் ஸ்ரீவைகுண்ட 77
54. சகியே அழைத்தோடி 78

பாலசரஸ்வதி கீர்த்தனை

55. சாக்ஷிநாதா 81

இயற்றியவர் பெயர் தெரியாதவை

56. இவனுக்குச் சரியான 84
57. ராம! உன்மகிமை 86
58. கண்டு சேவித்தேன் 87
59. ஆரால் அறிந்துரைக்க 89

# முத்துத்தாண்டவர்
# கீர்த்தனைகள்

பாட்டு எண் : 1
தரு : தோடி இராகம்

கீர்த்தனை : 1
ஜம்பை தாளம்

### பல்லவி

அம்பர சிதம்பர சதானந்த
அடிகள் மறவாதருளும் அனுதினமுமே
[அம்பர]

### அனுபல்லவி

செம்பொன் மலைச் சிலைவளைத்த திவ்விய பரமானந்த
சம்போ சிவசங்கர ஸ்ரீதாண்டவ நடேசா!
[அம்பர]

### சரணம்

கங்கை மதி அரவசைய காதிற் குழைஅசைய
செங்கைமழு துடிஅசைய செய்ய ஜடைஅசைய
பொங்குபுலி யதளசைய பொற்பாதச் சிலம்பசைய
மங்கைசிவ காமவல்லி மகிழ நடம்புரியும்
[அம்பர]

நின்மல நிராலம்ப நிர்க்குண நிரஞ்சன
சின்மயானந்த பர சிற்குண சொரூபா!
வன்மலங்கள் நீக்கியருள் வாரியுரவே எனது
புன்மையற உமைக்காணப் பொதுவில் நடம்புரியும்
[அம்பர]

துங்கமறை ஆகமங்கள் சொன்னவிதி வழுவாமா?
சிங்கார மாமகங்கள் செய்து தினந்தினமும்
மங்காத நீறுபுனை வைதிக மூவாயிரவர்
நங்கோ வென்றே பரவநாளும் நடம்புரியும் [அம்பர]

பாட்டு எண் : 2 கீர்த்தனை : 2

தரு : தருபார் இராகம் திரிபுடை தாளம்

### பல்லவி

உனை நம்பினேன் ஐயா சரணம் நாகம் [உனை]

### அனுபல்லவி

புனை சம்போ நடராஜா
புலியூர்வாழ் ஈசா [உனை]

### சரணம்

இருவர்தம் மிசைகொண்ட காதா—தித்தி
எனநின்று நடஞ்செய்யும் இங்கித பொற்பாதா !
திருநாவலூரன் விடுதூதா! — தில்லை
சிவகாமி யொருபாகா சிதம்பர நாதா ! [உனை]

மழுவுழை தரிக்கின்ற கைய்யா! — கொன்றை
மலர்மாலை புனைகின்ற வடிசுடர் மெய்யா !
எழுபுவி துதிக்கின்ற துய்யா! அன்ப
ரிடமா யிருந்துஇன்ப முடனாளு மய்யா ! [உனை]

நெடியமா லயன்தேடிக்காணா — தெங்கும்
நிறைந்தவா எலும்பெல்லாம் அணிந்திடும் பூணா !
அடியவர் தொழுந்தமிழ் வாணா!தில்லை
யம்பதி நடராஜா அம்பல வாணா ! [உனை]

# முத்துவேலவர் கீர்த்தனைகள்

பாட்டு எண் : 3 கீர்த்தனை : 1

தரு: பைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

இன்னந் தயவில்லையா அம்பா ஜகதீஸ்வரி
நித்யகல்யாணி?
[இன்னம்]

### அனுபல்லவி

கன்னல் மிகும் கரந்தாபுரியில் அடியார்க்குக் குஷ்டங் காமியமறுக்கு
சிவகாமிலோக சுந்தரி பன்னகா பரணர் சோமசுந்தரேசர்
பங்கில்வாழ் பார்வதி சகசாட்சி
நீ கடாட்சி சர்வசாட்சி மீனாட்சி
[இன்னம்]

### சரணம்

எங்கும் நிறைந்த பரிபூரணி நாரணி
இமையோர் முனிவோர் சகலரும் பணியுஞ் சரணி
பங்கயஆசனன் அரிகரர்க்குக் காரணி
பதித பாவனி மனோன்மணி
திங்கள் வதனி சுகபாணி கல்யாணி
தேவி மதுரவாணி கீர்வாணி
தங்கமணி மயலங்கார பூஷணி சாம்பவி
அனிவேணி மிகுபூரணி சிவசர்வாணி சுகஸ்வரூபிணி
[இன்னம்]

அகில உலகுக்கெல்லாம் ஆதிவஸ்துவாய் நின்றாய்
அண்டியசை மகிடாசுரன் தன்னை வென்றாய்
இகபரங்களுக்கே நீயே இருந்தாய் ஒன்றாய்
இப்பதனையும் பெற்றாய் நன்றாய்

மகிமை உரைக்க வென்றால்அரிபிரமாதியால்வழுத்த
    வொண்ணாது கண்டாய்! ஐயங்கொண்டாய்!
பகவதி திரிபுரையே சுபதாயகிபர்வத ராஜகுமாரி!
    கருணைவாரி சர்வதாரி மாயன் சோதரி! [இன்னம்]

தாயுந்தமரும் தந்தையும் குருதெய்வமும்
    சகலசாஸ்திர பரிஞான விவேகமும் வாயுவலதும்
மகிமையும் மிகுயோகமும் மனமகிழ்ச்சிகளும்
    வைபோகமும் நீ அல்லாதுண்டோ உலகினில்?
நின்வார்த்தைக் கிரண்டுண்டோ அருள் செய்வதென்றோ?
    சேயெனென முத்துவேலவரை ஈன்றருளிய
ஜெகத்தை எல்லாம் நீயே அளிக்கின்றாயே
    அடியேன் தாயே மீனாட்சியே [இன்னம்]

பாட்டு எண் : 4
தரு : பைரவி இராகம்

கீர்த்தனை : 2
ஆதி தாளம்

## பல்லவி

குத்தம் எத்தனையோ அத்தனையும் பொறுத்து நீ
என்குறை தீர்த்து தற்காத்தெனக்கருள் புரிவாய் [குத்தம்]

## சரணம்

உத்தமி பத்தர்க்குகந்த தத்தைமொழி பெண்ணரசே!
உச்சிதப் பொற்கச்சிட்டாப் பொற்புத் தனக்குஇலை
சித்தத்தில் பற்றற்ற சுற்றதவத்தோர்கள் வாழ்கரந்தையில்
ஸ்திரமாய் வீற்றிருக்கும் பொற்றொடி மீனாட்சிஎன்
[குத்தம்]

வச்சிரக்கல் பொற்சிமிக்கிக் கேற்ற திருவலயத்தில்
மற்றவர்க்குக் கிடைக்குமோ பொற்குழைக்கும் மூக்குத்திக்கும்
முச்சகமும் லெட்சயமாய் மதிக்கக் கூடாதவர்க்கும்
முத்துச் சொருகும் நித்தியம் வைபவம் நிறைந்தஜோதிஎன்
[குத்தம்]

எக்கலையுங் கற்றுணர்ந்து எப்பொருளும் பெற்றிருந்து
பக்குவம் எள்ளத்தனையோ கைக்கொள்ளா திருந்தாலவர்க்
கெக்கதி கிடைக்குமோ? பார்த்தன் பரிதான் கிடைக்குமோ
சொர்க்கத்த வரும்துதிசெய் முக்கட் பரமேசுவரிஎன்
[குத்தம்]

வெற்றிவேல் கையில்பிடித்து முத்துவேலவரைக் களித்துப்
பெற்றவளே ஆதிசக்தி அத்த சொக்கேசர் பங்கில்வாழ்
நற்றவமே சித்துருவே தத்துவமே முக்கனியே
சப்தத்துக் கெட்டாத பரவஸ்து நீ மீனாட்சிதாயே !
[குத்தம்]

பாட்டு எண் : 5 கீர்த்தனை 3

தரு : பைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

தினம்தினம் உன்பாதத்தை நினைந்துநான் பணிந்திடவும்
வரந்தரும் என்னம்மா
[தினம்தினம்]

### அனுபல்லவி

அனந்தவிதம் நினைந்து பணிஅணிந்து கனம்
பெரும் என்னெனும் பெரியநாயகி [தினம்தினம்]

### சரணம்

பருந்தரள வடங் கலவைசேர் பொடிபதிந்த தனம்
மிகுந்தகனிவாய் கிளிதிரிந்திடு மொழி தெளிந்த பிறை
வாணுதல் செயங்கொள் சிலையெனும் புருவமும்
பொருந்து செவிஅணிந்த மணியோலைகள் புரந்தனிலே
இலங்கு கதிர்வீசிட விரிந்தமலர் புனைந்தகுழல் மேகலை
விளங்கும்இடை சிலம்பினொலி யோடனு
[தினம்தினம்]

அருந்தமிழின் விதந்தெரியலாதவர் அகந்தனிலே
இருந்து தமிழ்மாலைகள் சொரிந்து பலன்ஏதொன்று மில்லாமலே
சுழன்றலையும் என்குறைகளோ அருந்துயரம் எனும்பிணிகள்
வருந்துமென தகந்தொலையவே ஒருமருந் துதவி
தெரிந்தடியன் மீதினில் மகிழ்ந்தருள்செய் துரந்தரி தயாபரி.
[தினம்தினம்]

பெரும்பிறவி எனுங்கடலில் மூழ்கிப் புரண்டுடலம்
வருந்தும்என்னை நீயும் உன்னரும்பதவி யுகந்துதவிஆதரி
அரும்புநகை இலங்கமலையே சுரும்புவிழி மடந்தையர்
சிரோமணி சுபம்பெருகக் குடந்தைநகர் மேவிய அருந்தவமே
புரிந்த முத்துவேலவரை அகங்கொளவேபெரும் பெரியநாயகி.
[தினம்தினம்]

பாட்டு எண் : 6 — கீர்த்தனை : 4

தரு: பியாகடை இராகம் — அடசாப்பு தாளம்

### பல்லவி

உன் சன்னதியே தஞ்சமென் றிறைஞ்சினேன் நான்
ஓங்காரி திரிசூலி கபாலி [உன்சன்னதி]

### அனுபல்லவி

கஞ்சன் பணியும் திருவாலங்காட்டிலுறை சௌந்தரி
அஞ்சொற்கிளியே கோகிலமே மர்ம வித்தியா நாயகியே
[உன்சன்னதி]

### சரணம்

அன்ன நடையும் மின்னிடையும் பொன்னுடையும்
தன்னிகரில்லாப் பொற்பாதமும் கண்டு திரிச்சடையும்
மின்னென்றுகந்து நின்னருள் செய்ய யாவருந் தடையும்
[உன்சன்னதி]

செந்தமிழறியாரிடம் போய்க் கால் கடுக்கும்
சிந்தனையை நீக்கி என்பாவம் விடுக்கும் அந்தரியே
சிந்தையில் நினைந்து வந்து வந்தடுக்கும்
சொந்தமடியார்க்கு எந்தவரமுங் கைமேற் கொடுக்கும்
[உன்சன்னதி]

அண்டர் பணியுஞ் சண்டிகையே கௌமாரி!
எண்திசையும் புகழும் தண்டியே கௌரி!
தண்டமிழ்க்கருள் முத்துவேலவரை ஈன்ற சோதரி
கொண்டர்க்குழலி பிரம்ம வித்தியா நாயகி பராத்பரி
[உன்சன்னதி]

பாட்டு எண் : 7 கீர்த்தனை : 5

தரு : பியாகடை இராகம் ஆதிதாளம்; ரூபகமுமாம்

## பல்லவி

வேலவனே தெய்வம் உன்னைப்போல் உண்டோ?
எந்தன் மீதில் வேளை பார்த்திரங்கும் வள்ளி மணவாளா
பன்னிருதோளா
[வேலவனே]

## அனுபல்லவி

நீலமாயைக்குள்ளகப்பட்டு நான்நெஞ்ச மிகவும் அஞ்சினேன்
காலப்பிழை எப்படியோ மலைக்கந்தனே என்முன்வந்து காத்தருள்
[வேலவனே]

## சரணம்

நீயே துணையல்லாமலெனக்கு நிஜமாய் வேறொருவர் துணையில்லை
தாயுந் தமரும் தந்தையு நீதான் எனக்குநீ அய்யா
காயமெடுத்தெத்தனையோ கணக்கில்லாத பிறவியில் நொந்தேன்
மாயவன்மருகனே குகனே ஷண்முகனே முக்கண்ணன் மகனே வடி
[வேலவனே]

அல்லும் பகலும் தொழுதுன தடியிணை வணங்கினேன் ஒருவாக்குச்
சொல்லவுந் தயவில்லையோ நான் சொந்த அடிமையல்லவோ
கல்லுமனதோ அல்லாமலென்ன சுவடோ கருணைக்கிவன் பாத்திரம்
அல்லவென்று தள்ளியே பராமுகமா இருப்பதுகப்போ வடி
[வேலவனே]

ஒருக்கா லாகிலும் நின்னருட் கண்திறக்காமல் இப்படியே
திருக்காமர் பழனியில் வாழ் தேவாதி தேவா
திருக்காவலா வந்துலுத்தரைப்பாடி மனம் நையாமல் அன்
பருக்கு ஆவலாய் வந்து வேண்டிய பாக்கியங் கொடுத்துப் புகழ்
பெற்ற முத்து
[வேலவனே]

பாட்டு எண் : 8 கீர்த்தனை : 6

தரு : ஆனந்தபைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

ஈஸ்வரி ஜகதம்பா நின்இணையடியென நம்பினேன்
எப்படியோ நினதருள் என்கற்பகமே தாயே

[ஈஸ்வரி]

### அனுபல்லவி

வாசவன் போற்றுங் குடந்தைநகர் வாழும் மனோன்மணியான
தேசமார் கும்பேசரிடம் வாழ்செல்வி ஐயமங்களநாயகி

[ஈஸ்வரி]

### சரணம்

உன்சன்னதி கண்டால வர்க்கொரு சஞ்சலம் உண்டோ?
உலகினில் கஞ்சன் பணியுஞ் செஞ்சரணியே
மஞ்சுபாஷிணி தஞ்சமென் றடுத்தபேரை
அஞ்சேலென் றாதரித்துக்காக்கும் ரஞ்சித நவரசபுஞ்சகமே
வஞ்சியர் மோகினி அஞ்சுகமே

[ஈஸ்வரி]

உந்தனை நான் அனுதினமும் என்சிந்தையில் நினைந்து நினைந்து
வந்தனை புரிந்தும் இன்னமும் இந்தத் தாமதம் ஏனம்மா?
கொந்தலர்க்குழலியை நினைத்தவர் அந்தச்சமயம் கடைக்கண் பார்
மந்தரநிகர் முலையாளே நிரந்தரம் உலகெங்கும் நிறைந்திடும்

[ஈஸ்வரி]

சங்கரி காமாட்சி பக்தவ சங்கரி கௌரிவராகி
திங்கள்வதனி அங்கயற்கண்ணி பொங்கும் அமுதமே
செங்கையில் பாசாங்குசம் வைத்தமங்கையே மாயவன் தங்கையே
எங்கள் முத்துவேலவரை யீன்ற மங்கையே மங்களநாயகி

[ஈஸ்வரி]

பாட்டு எண்: 9 கீர்த்தனை: 7
தரு: ஆனந்தபைரவி இராகம் ரூபக தாளம்

## பல்லவி

முருகையனே! பன்னிருகையனே முற்றிலுந் தானொந்தேன் சித்தம்
திரும்பாமல் இத்தனை பராமுகமா என்மீதினில்?
[முருகையனே]

## அனுபல்லவி

திருமருவும் பழனிக்கிரிதனில் தேவாதி தேவனே!
மருமலர்க் கூந்தல் வள்ளிமணவாளா சிலம்பணிதாளா!
[முருகையனே]

## சரணம்

ஆறுகுற்ற நூறுபிழை செய்யிலும் நீயல்லோ பொறுக்கவேணும்
உன்னையன்றி
வேறொருவருண்டோ உலகினில் மெய்யாகத் தெய்வம்நீயே
பேறுபெற்றவர்கள் தான்நிற்க என்னைப்பேணி வைத்தடிமை
யாக்கிக்காத்தருள்
ஆறினைச் சடையிலேதரித்த யீசர்க்காரணப் பொருளை
ஆதரித்துச் சொல்லும்
[முருகையனே]

மாலினுக்கு மாமருகனாம் சிகிவாகனனே குகனே ஆறுமுகனே
சேலினுக்கிணை விழியாள் தெய்வானையைச் சேர்ந்து
நூலினுக்கும் மறைநாலினுக்கும் அப்பாலொளிக்கு முதல்வா
குமரேசனே
பாலினிக்கும் இனிப்பான உன்வாக்கா லுன்பாலழைத் தென்னை
அன்பால் அளித்துக்களிக்கும்
[முருகையனே]

பாரனைத்தும் எள்ளில் எண்ணெய் போலெங்கும் பரவி
எழுந்தருளிய ஜோதியே!
சூரனைக் கடுகி வேலால் துணித்திடும் சுந்தரமெய்ப் பொருளே!
வாரணத்தினெழில் மாமுகற் கிளையவா நன்பழனிவாழ்
முத்துவேலவரைப்
பேரினில்பெரியவா கடப்பமலர் தாரினைப்புனையும் யோகக்
கடவுள்
[முருகையனே]

பாட்டு எண்: 10 கீர்த்தனை: 8

தரு: பந்துவராளி இராகம் ஆதி தாளம்

## பல்லவி

இந்நேரத்தில் போகச் சொன்னீரே சாமி எப்படிப்
போய் வருவேன்

[இந்நேரம்]

## அனுபல்லவி

முன்னேரத்தில் எழுந்திருக்கச் சொல்ல லாகாதோ
முத்துவேலவரே நீர் மெத்தவுங் குழந்தைபோல

[இந்நேரம்]

## சரணம்

முன்னெற்றி மயிரைப்பற்றிப் பிடித்தாலும் தெரியாது
முழுக்கருக்கல் அதிகமாச்சுது
மின்னல் பளிச்சுங்குது மழையோ இரண்டுது
காவேரி கரைபுரண்ட நீச்சு
சொன்னத்தைத் தட்டாமற் போய்வருவோ மென்றால்
வழியில் சோரபயமென்கிற பேச்சு
என்னத்துக்கு இந்தச்சோதியில் எளிதோ சொல்லும்
எங்குந்தானும் படியடங்கிப் போச்சு

[இந்நேரம்]

அவளிருக்கும் வீடோஒரு நாழிகைக்கப்பால் கூப்பிடுதூரம்
ஆனால் இவ்விடம் அவ்விடமல்ல ஆத்துக்கு வடகரை
எழுந்தமடவளாத்தோரம் விவரமில்லாமற் போயும்
பேயுங் கையடிக்கிற வேளையில் போய்த்தானென்ன சாரம்
கவுடென் றெண்ணாதேயும் ஒரு புதிர் கிடையாது
காடுங் கரையுமாகி இருக்கும் புவிவிஸ்தாரம்

[இந்நேரம்]

தெற்குவடக்குத் தெரியாது வழிநெடுகச் சேறும் உளையும் ஒருக்காலே
உமக்குச் சர்க்கரை அவளிதழ் சுவைத்துச் சுவைத்துத்
தழுவிப் புணர்ந்த ஆசையாலே அக்கரை சொல்ல வாரீர்
முத்துவேலவரே அதுஉமக்குத் தெரியாத வேலை
மொக்கரம் போட்டுத் தூங்குவாரவர் வீட்டினில்
முன்சொல்லாத குற்றம் அத்தனையும் யார்மேலே
[இந்நேரம்]

பாட்டு எண் : 11 கீர்த்தனை : 9

தரு : சங்கராபரணஇராகம் ஆதி தாளம்

### பல்லவி

ஆதிசக்தி ஜகத்காரணி நின்னருள் என்னமோ அன்னபூரணி

[ஆதி]

### அனுபல்லவி

மேதினி புகழ் காஞ்சி நகர்தனிலே வளர்
மெல்லியல் காமாட்சி லோகசாட்சி

[ஆதி]

### சரணம்

ஆலைக்கரும்பின் மொழி, பாலைத்துளிரதரம்,
சேலைப்பழிக்கும் விழி, நூலினுண்ணிடை, பதி
னாலுலகங்களும் உன்னாலே விளங்குதுன் கண்
ணாலே கடாட்சிப்பா யென்பாலே கோலாகலியே

[ஆதி]

வேதஸ்வரூபியும் நீ வேதத்துக் கப்பாலும் நீ
நாதஸ்வரூபியும் நீ நாதாந்தப் பொருளும் நீ
கோதை அமுதமும் நீ குறைவில்லாச் செல்வமும் நீ
ஆதிஅந்தமில்லாத அனாதிப் பொருளும் நீ

[ஆதி]

பஞ்ச கித்தியங்களும் உன்தன் சன்னதிப் பிரபாவம்
நெஞ்சில் நினைத்தாலுன்னைச் சஞ்சலம் தீர்ந்தேகுமே!
செஞ்சொல் முத்துவேலரை நெஞ்சம் மகிழ்ந்து பெற்ற
கஞ்சமலர் வதனி காஞ்சி காமாட்சி

[ஆதி]

பாட்டு எண் : 12 கீர்த்தனை : 10

தரு: கல்யாணி இராகம் ஆதி தாளம்

## பல்லவி

கிருபை பண்ணம்மா திருபுவனேஸ்வரி !
வரதகீர்வாணி! நிலை கல்யாணி !

[கிருபை]

## அனுபல்லவி

பரிபூரணி காரணி நாரணி சிவபரம பராத்பரி பரசிவசங்கரி
ஹரிசோதரி மஹாகாளி காத்யாயனி பவானி மங்களாம்பிகே
உமையே

[கிருபை]

## சரணம்

ஓங்காரி திரிசூலி பரஜோதி உத்தண்டி
பார்வதி பராசக்தி
நீங்காத பவசாகரத்துக் கொருநிஞ்சு
தெப்பமா நின்றவளே
பூங்கா வனக்குயிலே இளமயிலே புகழன்னமே
விலையில்லாச் சொர்ணமே
பாங்கான சுருதி முடிவாலும் பார்க்கப்படாதெழுந்த
முன்னே எந்நேரமும் என்மேல்

[கிருபை]

நளிநாட்சி தயாபரி சுகசாமளி
சுபதாயகி கேயூர மணிமயபூஷணி
அளிகுலவேணி பாசாங்குசபாணி
அமரர் தினமும் பணிந்திடும் அருள்
ஒளியே துளிரிதழ் முல்லைமுறுவல்
பிறைநுதலிலகு துர்க்கை
எளியனையுன் மக்களைப்போல என்றைக்கும்

[கிருபை]

பஞ்சாட்சரி அபிராமி மனோன்மணி
பவானி சிவகாமி! மாதங்கி!
கஞ்சாசனன்புகழ் முத்துவேலவரைக்
கருத்துகந் தளித்தாயே!
மஞ்சார் பொழில்சூழும் வாஞ்சிநகர் தன்னில்
வாசமாய் எந்நாளும் வீற்றிருக்கப்
பஞ்சானனர் எங்கள் வங்கலிங்கர் பங்கில்
வாழ்ந்திடும் மங்களாம்பி உமையே!
[கிருபை]

# கனம் கிருஷ்ணையர்

# கீர்த்தனைகள்

பாட்டு எண் : 13 கீர்த்தனை : 1

தரு : பைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

கொடுத்து வைத்தது வரும்பேராசையால்
மிகக்குறைப்பட்டால் வருகுமோ பேய்மனதே
[கொடுத்து]

### அனுபல்லவி

படுத்தால் பின்னாலே கூடவருவாருண்டோ
பயறணீசரை நிதம்பத்தியாய்த் தொழுதிரு
[கொடுத்து]

### சரணம்

தூரரா யொருவரையும் மாராட்டஞ் செய்யாதே
ஆரென்ன செய்வார்கள் கோரினது வருமே
தாராள மாகவே நாராயணன் கிருபையைப்
பாராயணஞ் செய்தால் நேராக் கிடைக்குமே
[கொடுத்து]

ராகத் துவேஷஞ்செய்து சாகாதே விஷதுல்லிய
மோக பாசத்திலே தேகங் கட்டுப்படாமல்
ஏகாந்த மாகவே யோக சமாதியிலே
சோகஞ் சோகமென்று ஸ்வரூபமாக விளங்கு
[கொடுத்து]

வித்துவான் நானென்று எத்துவாதம் பண்ணாதே
சித்தனமான வேலவரை சத்பாவனை பண்ணு
தத்துபோத முடனே தத்பர மாகவே
முற்கபுரீசனை அற்புதமாய் நினைந்தென்றும் பணி
[கொடுத்து]

பாட்டு எண்: 14 கீர்த்தனை: 2

தரு: தோடி இராகம் ஆதிதாளம்

### பல்லவி

வாராரோ வந்துமுத்தந் தாராரோ அவரிப்போ
நேராரோ என்னைமிக்க கோராரோ துரைஇங்கே
[வாராரோ]

### அனுபல்லவி

பாராளுஞ் சோலைசூழ் உடையார் பாளையந்தனிலே
பார்த்திபனாக எங்கிலும் கீர்த்திபரனாகவே
நாராயணபசனை பாராயணமே செய்யும் நாதன்கச்சி
கல்லியாண ரங்கமகா ராஜனும்
[வாராரோ]

### சரணம்

பருவவயதில் என்னை மருவவந்தால் அவர்க்குப்
பலனுண்டாகுமென்று பாங்கியே சொல்லடி
உருகுதே அவரை நினைத்து நினைத்து
உள்ளபடியே ஒருவகையாக
வருகுதே என்செய்வேன் மார்பிலே மாரன்கணைகள்
வந்து துளைக்குதடி
முருகார் குழலைத் தொடர்ந்து தொடர்ந்து கருவண்டுகள்
மொய்க்குதடி பால்அன்னமும் கைக்குதடி துரைஇங்கே
[வாராரோ]

மாமயில் நடஞ்செய்யும் மாங்குயிலுங் கூவுதே
மஞ்சமீதினில் நிலவுலவும் மாலைநேரத்தில்
தாமதஞ் செய்தால் விரகம் தலைக்கேறுதே
மதியும் தழல்போல் தூவுதே என்னாவியும் சோருதே
பூமானே வழி சொல்லடி பாரினிலே
புரந்தரன்போல் எனக்கும் புருஷனுண்டோ
காமரசவல்லி என்னும் கண்ணே கண்மணி என்றும்
கற்கண் டதரத்தைச் சுவைத்து மண்டலாதிபரு மிங்கே
[வாராரோ]

கா்ணுதே எப்போதைக்கும் இருந்தவிடம் நின்றவிடம்
கற்பகமே எந்தஇடமும் கணவனைப் போலே
தோணுதே என்றன் குறையைத் தோகையே உன்னிடம் சொன்னேன்
சொல்லி முடியாதடி சுகிர்தமுண்டு
நாணுதே மதிமயங்குதே தயங்குதடி நாதன் வடிவேலவர்
கிருபைநானறிவேனோ மனங்
கோணுமோ ரெங்கபூபாலன் பாலன் கல்லியாணரெங்கன்
கூட்டிவந்தால் உந்தனுக்கு மேட்டிமையுண்டே மன்னவன்
[வாராரோ]

எத்தனை விதத்திலோ என்தன் மனத்தை எலக்கெலக்காய்
ஆராய்ந்து குணமுள்ள பத்தினி என்றெண்ணிச்
சித்தமும் மகிழ்ந்து பட்சம் வைத்துச் சிங்காரித்துச்
சித்தினிச் சாதிப் பெண்ணே யென்றே
எங்கள் பெரிய செல்வமாகவே யழைத்து அணைந்திருந்தவர்
முத்துவேலன் கிருபை பெற்ற கச்சிக் கல்யாண
ரெங்கனே காதல் கொண்டேன் உந்தன் மீதில் மோகமாகி
எந்தன் மீதில் தாகமாக துரைஅவர்
[வாராரோ]

பாட்டு எண் : 15 கீர்த்தனை : 3

தரு: தோடி இராகம் ஆதி தாளம்

## பல்லவி

பச்சிளந்தேமல் படர்ந்து கச்சிருக்கும் பூண்முலையாள்
பாடியே மாடிமீதில் தேடிவந்து காத்திருக்கிறாள்

[பச்சிளந்]

## அனுபல்லவி

முச்சகமும் விலையல்லவே முத்துவிஜய ரெங்கேந்திரன்
முறையாகத்தவஞ் செய்துபெற்ற மகிபாலன்
கச்சிரெங்க மகராஜனே கங்குல் யுகமாகியே
காரிகையாள் மதிமயங்கிக் காமலாகிரி கொண்டு

[பச்சிளந்]

## சரணம்

செஞ்சொல் வாய்க்கனியிதழும்
செங்கை வளையும் சிறுநகையும்
கொஞ்சுகிளிபோல் மொழியும்
குவளைபோல் இருவிழியும் என்சொல்வேனவள்
மஞ்சுளமோ உமைத் தஞ்சமென்று
விரக மிஞ்சித் தயங்குகிறாள்
வஞ்சனைசெய்யாமல் பஞ்சணைமீதினில்
வஞ்சியுடன் ரஞ்சிதமாய் விளையாடும்

[பச்சிளந்]

அன்னம்போலே நடையாள்
அவளிருகதலித் தொடையாள்
சின்னஞ்சிறுத்த இடையாள்
சித்திரப்பெண் பட்டுடையாள்
கன்னல்மொழியாள் மின்னற்கொடியாள் சொர்ணமவள்
என்னென்ன மாயம் செய்தீரோ
மன்னனுக்கு மன்னனே மகாப்பிரபுவே
வஞ்சியருக்குள் சிரோரத்தினமாகவே

[பச்சிளந்]

வேலவர் கிருபையும் படைத்து விளங்கும்
முத்து விஜய ரெங்கேந்திரன்
பாலனே இரவும்பகலும் பைந்தொடியாள்
மிகஉருகுறாள் வாலைப்பருவமே
சோலைக்கிளியாளே மேலுமையாளு
உனைப்போலே அவளுக்குண்டோ
சீலனே கச்சிரெங்க மகராஜனே சிந்தை மகிழ்ந்து
கலந்து முன்போலவே

[பச்சிளந்]

பாட்டு எண் : 16 கீர்த்தனை : 4

தரு : தோடி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

அன்னமே நான் என்னசெய்வேன் பண்டு பழகி
அருமை அறிந்த துரைஅவனே என்னைமறந்தால்
[அன்னமே]

### அனுபல்லவி

மன்னர் புகழுதுரை வேந்தனில் வாழும்
எங்கள் மகிபன் முத்தய்யனருள் மகிபாலன்
கன்னல் மொழியெல்லார்க் கிராமபத்தி ரேந்திரசாமி
நனவிலும் கனவிலும் கவுடுசெய்தால்
[அன்னமே]

### சரணம்

என்னகாரணமே அறிவேனோ? என்னபாவஞ் செய்திருந்தேனோ?
மிக்ககாமன்
சன்னதங்கொண்டு தலைசுற்றி ஆற்றித் தணல்போலுடலுங்
கொதிக்குதே
சின்னவயதினில் நன்னய மாய்வெகு உன்னிதமாய் மெத்த
நிர்ணயமாகவே
சொன்னவிஷயங்க ளெல்லாம் கைபோட்டுக் கொடுத்து இந்நேரம்
அநீதஞ்செய்த
[அன்னமே]

தாதுபிராது இல்லையே பெண்பிறந்து தயங்கித்திரிய
தலையில் பிரம்மதேவன்
ஏதோ விதித்திருப்பானோ? விதிவசம் என்னென்னமோ
அறியேனே
பூதலத்திலுள்ள மாதர்கள் சொன்னதைப் போதனையாக
எண்ணித் தோதகஞ் செய்தென்ன
பேதகம் நினையாரோ அவர்க்கினி ஆதரவுயார்
பாதகிநீயே சொல்லடி!
[அன்னமே]

எத்தனைபேர் உறவாயிருந்தாலும் எல்லோரும் எனக்குச் சரியோ?
எங்கள் வள்ளி
முத்துவேலவரை யெந்நாளும் பணிந்திப்போ மோடி செய்வதேது
நியாயமோ? அவர்
வித்தைஎல்லாஞ் செய்துகுற்றம் என்தன்மீதில் சுமத்துமனதில்
நினைத்த விராம
பத்திரசாமி இனிமேலாகிலும் அணைந்தென்றன்
மனத்துயரந் தீரும்

[அன்னமே]

*பாட்டு எண் : 17* | *கீர்த்தனை : 5*

*தரு : சாவேரி இராகம்* | *ஆதிதாளம்*

### பல்லவி

*ரெங்கநாயக பங்கஜலோசனா ரெட்சிக்க வேணுமையா*

*[ரெங்க]*

### அனுபல்லவி

*பொங்கமாகிய பாற்கடல் தன்னில் முன்னாள்*
*பொன்னுந்திக் கமலத்தில் பிரம்மதேவரைப் பெற்ற*

*[ரெங்க]*

### சரணம்

*பொருந்து முன்னது நிஜதரிசனம் வேணுமென்று*
*பூவயன் கேட்குமுன்பு ஊனிப்*
*பெருந்தவ மேசெய்த நிஜதரிசனம்*
*பெறலாம் பெற்றபின்பு*
*அருந்தவ மேபுரிந்து அநேக நாளாக ஆகாரம்*
*நித்திரை பிரிந்து அப்போ*
*வருந்தும் பொழுது பன்னாக சயனத்துடன் வரிசைக் கனகக்*
*கொடுமுடி மருவிவிமா னத்துடனே கடல்மீதி லெழுந்துவந்த*

*[ரெங்க]*

*தவறாமல் அயனுக்குக் காட்சி கொடுக்கவென்று*
*சத்திய உலகிலிருந்து அப்போ*
*தவம்புரியும் இட்சுவாகுக் கிரங்க*
*வேதன் தன்னிட இடம்பிரிந்து*
*அவனிதனில் வருகிறேன் மத்தியான பூசைக்கென்று*
*சொல்லி நளினமலர் முகன் இட்சுவாகு குலத்தில்வந்து*
*நளினத்திரு விழியருள்செய் தெழுபத்து*
*நாலு தலைமுறை அங்கேஎழுந்தருளிய*

*[ரெங்க]*

மந்தாகினிக்கும் காவேரிக்கும் வாது வந்து
மலரயனிடஞ் சொல்ல அவர்
அந்தரந்தனில் அரிபாதத்தில் வந்த கங்கை
அதிகம் என்று சொல்ல
சிந்தை மிகவும் தளர்ந்து காவேரி தவஞ்செய்யும்
பொழுது மகிழ்ந்து நாம் விந்தையாயுன் மடிமீதினில்
வந்திருந்து மிகவாகிய கங்காநதியிலு மதின்
மேன்மை தருகிறோமென வரமருளிய

[ரெங்க]

பொங்கும் விமானத்தை ராமன் விபீஷணற்குப்
பூசை செய்யென்று கொடுக்க அவர்
அங்கிருந்தவர் கொண்டுவரும்போது தர்மமா
வர்மமாயறிந்து போய் எடுத்து
சிங்காரமாய் நல்ல திருநாளிங்கே செய்கிறோம்
என்று சொல்ல அப்போ
மங்களமான திருக்காவேரி நடுவில்வளர் சந்திரபுஷ்கரணி
புன்னாகவு மருவுமிடத்தில் விபீஷணன் வைத்திடும்

[ரெங்க]

இலங்கு விமானத்தைப் பின்பு விபீஷணற்கு
எடுக்கப்படாமலிருந்து அப்போ
மயங்கி வருந்தும்போது காவேரிக்கு நாம்
முன்பு வரங்கொடுத்தோமென முன்வந்து
இலங்கையைப் பார்த்துக் கொண்டு
இவிடத்தில் இருக்கிறோமென்றுசொல அப்போ
நலங்கொள் ஸப்தப்ரவாக நடுவில் வளருமாலை
ஞாலம்புகழும் வல்லிரங்க நாயகருக்கு வரதாயகராகிய

[ரெங்க]

பாட்டு எண் : 18 கீர்த்தனை : 6

தரு : தோடி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

நீயல்லாமல் வேறேயு முண்டோ ?
நிச்சயமாய் அச்சுதனே தானே
[நீயல்லாமல்]

### அனுபல்லவி

நானென்பது காலத்திரயத்திலு மில்லை நலம்பெரிய
மறைதனிலே[1] விளங்கிய
ஞானமுனிவ ரெல்லோரும் பணிந்திடும் நாதனே
ஸ்ரீனிவாசனே ஹரி
[நீயல்லாமல்]

### சரணம்

ஏகமாய் சின்மயமாகவே எங்கும்நிறைந்து அகண்டாகாரம்
தேகமோக சுகங்களேது தேவாதிதேவனே முரகரி
[நீயல்லாமல்]

பந்துவும் நீயே பேரும் ஊரும்நீ பேரின்பக்கடலாகிய குணநிதி
உன்திருவடிக் கிணையாக வேறே ஒருவருண்டோ முரகரிநரகரி
[நீயல்லாமல்]

1. பெரியமறை - அரியலூருக்குத் தெற்கேயுள்ள ஒரு ஸ்தலம்.

பாட்டு எண் : 19 கீர்த்தனை : 7

தரு : தோடி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

திருக்கண் மாலீசுவரருக் குகந்த தேவியே
ஓங்காரி பரஞ்சோதி

[திருக்கண்]

### அனுபல்லவி

பெருக்கமாகவே கிருஷ்ண புரந்தனிலே
பெருமையாக வாழ்ந்திடும் ஆதிஅன்
பருக்குமிகவும் நினைத்தபடி வரங்கொடுக்கும்
அம்மணி மதுகரவேணி சுகபாணி

[திருக்கண்]

### சரணம்

ஆயகலைக் கிரங்கும் ஆனந்த வல்லியே
மாயவன் தங்கையே மகத்தான ஒளியே
காயக் கிலேசஞ்செய்து கருத்துருக அறியேன்
தாயே சகலத்திலுந் தான்தானே யாய்நிறைந்த

[திருக்கண்]

பாட்டு எண் : 20 கீர்த்தனை : 8

தரு : தோடி இராகம் ரூபக தாளம்

### பல்லவி

மன்னனார் வலைவீசி மாயஞ்செய்தாரோ ராஜ

[மன்னனார்]

### அனுபல்லவி

மின்னும் பொன்மதில் அழகும் நல்வீதி விலாசமும்

சொன்ன விமானமும் கண்டுதுலங்கவே தனங்குலுங்க ராஜ

[மன்னனார்]

### சரணம்

திருநாமமும் சிந்தூரத் திலகப்பொட்டும் சேவையழகும்

ஒருநாமமும் இணையில்லையேஅவர் ஒருதரமிங்கே மருவவரவே

[மன்னனார்]

பாட்டு எண் : 21 கீர்த்தனை : 9

தரு: தோடி இராகம் ரூபக தாளம்

### பல்லவி

சைதன்னிய விக்கிரகமே! சதானந்த சைதன்னிய விக்கிரகமே
[சைதன்னிய]

### அனுபல்லவி

கைவல்ய கருணாநிதி! ஒன்றே
காலத்திரயத்தில் கண்டது வேறுண்டோ
[சைதன்னிய]

### சரணம்

எப்போது பார்த்தாலும் ஏகமாகி
நிர்விகற்ப மயமான காட்சி ஸர்வஸாட்சி
[சைதன்னிய]

ஊட்டுஞ் சிவபோதம் ஒருமையாய்ப் பெருமையாய்
நாட்டுங் குருஸ்வாமி நாட்டம் நித்தியந்தேட்டம்
[சைதன்னிய]

சக்தி சிவமான சத்துச்சித் தானந்தம்
வெற்றி மகாவெற்றி விவேக ராஜயோக
[சைதன்னிய]

பாட்டு எண் : 22 கீர்த்தனை : 10

தரு: தோடி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

மனமே யெந்நாளும் நிர்ணயமே சச்சிதானந்த
கனமே சத்தியம்இன்னம் வேறுண்டோ

[மனமே]

### அனுபல்லவி

வனங்களில் திரிந்தாலும் ஒருவஸ்து வைத்தவிர-வேறென்
மனத்தொன்று மில்லையே! மலைத்து மயங்காதே மூட

[மனமே]

### சரணம்

செகத்தைச் சொப்பனம் போலெண்ணியே சிவாகாரமாய்ச்
சதா விளங்கும்
மிகக்கோபங் கொண்டுபெரும் பகையொடு ஒருவருக்கு
வேண்டிவினை செய்யாதே
அகத்தை அடைந்தடைந்து
ஆசைகொள்ளாதே விஷய
சுகத்தினால் கெட்டுப்போய் வீணான துர்ப்புத்தியைத்
தள்ளு மூட

[மனமே]

பாட்டு எண் : 27 கீர்த்தனை : 15

தரு : பைரவி இராகம் ஆதி தாளம்

## பல்லவி

வேலவரே யுமைத்தேடி ஒருமடந்தை
விடியுமளவும் காத்திருக்கும் வகையென்ன?

[வேலவரே]

## அனுபல்லவி

வாலிபமும் சேல்விழியும் வில்லுப்புருவமும்
வடிவினில் இடையும் மதிவதனமும்
மேலுமவள் மேனிபசும் பொன்னிறமே
மின்னற்கொடியோ அன்னநடையாள் ஒயிலாகவே

[வேலவரே]

## சரணம்

விதம்வித மாகப் பச்சிளங் கொங்கை மீதினிலே
வேணபணி தரித்து அவள்பல்லு வரிசையும்
கதலித்தொடையும் அதரக்கனியும் சொருக்கழகும்
கருத்தையுருக்கக் கலகலென நடையில்வந்து

[வேலவரே]

சித்திரப்பொற் பலகணி வாசலிலே வந்துநின்று
தியங்கி மதிமயங்கித் திகைத்துத் தவிக்கிறாள்
குத்தரங்குடிலம் என்றும் தந்தலை யெழுத்தென்றும்
குமுறிக்குமுறி உருகுகிறாள் மிகவாடி

[வேலவரே]

கண்களுக்குள் கலநீரு முத்துமுத்தாய் உகுக்கிறாள்
கையைநெரித்துத் தலைகுனிந்து நிற்கிறாள்
பெண்களுக்கு உங்கள் திருவுளம் இரங்காதோ
பேசிமருவி முன்போலவே சேர

[வேலவரே]

செந்திரு வேலருக் கனுகூலா தழைக்கும்
திருக்குன்னம் வாழ்சவுந்தர ராஜலோலா
உன்திரு நாமஸ்மரண மேலா ஒகோமாய
வினோதலீலா பாலா கோபாலா

*[உன்பதமே]*

பாட்டு எண் : 24 கீர்த்தனை : 12

தரு: பைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

இன்னம்மனம் இரக்கம் வல்லையோ
ஏகநாத மகப்பிரபுவே
[இன்னம்]

### அனுபல்லவி

பன்னக சயனனே பரந்தாமனே ஸ்ரீபரமபுருஷனே
அரிகர சௌந்தர ராஜனே
[இன்னம்]

### சரணம்

பக்தபரா தீனரென்று விருதுபெற்ற வயனமென்ன பாரமா?
உனக்கிது பாரமா?
முக்திதர நீரென்னுள்ளே மூர்த்திகரமாட நிறைந்த மூர்த்தியே
உனக்கப கீர்த்தியே சூத்திரதாரி!
[இன்னம்]

உருக்கு கம்பத்தி விருந்துவந்து பிரகலாதனைக் காப்பாற்றினாய்
ஓராமா! உனக்கிந்தப் பேராமா?
பெருக்கமாய் உன்பாதமன்றிப் பேரின்பமும் வேறுண்டோ?
பெருமானே என்பெருமானே திருவடிக்கு
[இன்னம்]

பாட்டு எண் : 25 கீர்த்தனை: 13

தரு: பைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

படியளக்கும் பெருமானென்று உள்ளபடி பார்த்தவர்க்குப்
பதறுமா? சிந்தை சிதறுமா?
[படியளக்கும்]

### அனுபல்லவி

அடியளந்த மாயவன் திருக்குன்றம் தனில்வாழும்
எங்கள் ஆனந்த வைகுண்டமூர்த்தி சௌந்தரராஜர்
[படியளக்கும்]

### சரணம்

பேச்சேது மூச்சேது பேரேது ஊரேது
பெண்டிர் மக்களேது பிரபலமும் ஏது
நீச்சேது நிலையேது நிமிஷமுந் தானேது
நித்தம் சுகித்திருக்கும் நினைவு மேது
[படியளக்கும்]

போக்கேது வரத்தேது புதுமையுந் தானேது
பொழிவது அழிவது பொருள் திருவல்லாமல்
வாக்கேது மனமேது மாய காயமேது
மலைமேலிட்ட விளக்காய் மாதவனும் எல்லார்க்கும்
[படியளக்கும்]

முருகன்மா மனைத்தவிர முதலேது பதிலேது?
மோக போகமேது முற்றான தத்துவமேது
தருவேது சுகமேது சகலசாம்பி ராச்சியமும்
சர்வ காலங்களிலும் சௌந்தர ராஜர்
[படியளக்கும்]

பாட்டு எண்: 26 கீர்த்தனை: 14

தரு: பைரவி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

முன்னழகும் பின்னழகும் சாரநாத சாரநாயகி
மூர்த்தியாடின சொகுசு முயங்கு துளந்தியங்குதடி!
[முன்னழகும்]

### அனுபல்லவி

முன்னேவந்து நின்றுஎங்கள் வேங்கடராமனைக் களிக்கும்
முகுந்தனடி எனக்கவர் சொந்தமடி
இன்னம் மேன்மேல் சேர்வைதரும் ஏகாந்த நாதனைப்போல்
எங்கெங்கும் தோணுதடி சுக்கிரவார தினத்தில்
[முன்னழகும்]

### சரணம்

பொற்பூணல் குண்டலதாரி பொற்றிருவடிக் காளாகி
அற்புதமாய் அர்ச்சனைசெய்து ஆனந்த மானேன்
உற்பனமான அந்தமாணிக்கக் கொண்டையும்அந்தக்
கற்பனையும் யார்க்குத்தெரியும் அகண்ட சாகரமான
[முன்னழகும்]

வில்வம் துளசி மருமுல்லை வேர்க்கொழுந்தும் அணிந்து
கல்விக் கடலாய் விளங்கும் கருணாலயரடி
செல்வம்போல் புன்னகையும் செகப்பும் மெல்லப்போய்ப்
பக்தருக்கிந்த
நல்வழியை நாட்டிவைத்து நாட்டியமாடிப் பாடிவைக்கும்
[முன்னழகும்]

*சாரட் சேத்திரந்தனிலே சச்சிதானந்த கனமாகி*
*சார புஷ் கரணியிலே சேவித்துத் தன்யமானேன்*
*சாரவிமானமுங்கண்டு தளருதே மொழிகுளறுதே அடி*
*ஆறுமுகமன்றி எனக்கார் வேறுதுணை சொல்லடி*

*[முன்னழகும்]*

*பாட்டு எண்: 23* *கீர்த்தனை: 11*

*தரு: தேசிகதோடி இராகம்* *ஆதி தாளம்*

### பல்லவி

*உன்பதமே சதாகதியென்று உள்ளபடி நினைந்தவர்க்கு*
*உன்மகிமை நீமறந்தால் உன்பெருமை தான்என்ன?*

*[உன்பதமே]*

### அனுபல்லவி

*சின்முத்திரா தாரியாக செகத்தில் விருதுபெற்று*
*ஸ்ரீசௌந்தர ராஜரே செல்வமாக எப்போதும்*

*[உன்பதமே]*

### சரணம்

*கருணை பொழிய இன்னம் தெந்தனமா? — பக்தர்கள்*
*கவலை தீர்க்கவும் உனக்கிது கனமா?*
*தருணம்தருணம் வினையமனமா? நீ*
*தாமதஞ் செய்தால் உனக்கிது மனமோ கனமா?*

*[உன்பதமே]*

*பன்னக சயனா பரந்தாமா உன்தன்*
*பணிவிடை செய்யாம லிருப்பதாமா?*
*என்னென்ன வோஅறியேன் ராமா*
*ஏகநாதா பூரணாகமா கன்னியர் காமா*

*[உன்பதமே]*

பாட்டு எண் : 28 கீர்த்தனை : 16

தரு : பைரவி இராகம் ஆதி தாளம்

## பல்லவி

ஜெகஜனனீ சுகபாணி கல்யாணி

## அனுபல்லவி

சுகஸ்வரூபிணி மதுரவாணி சொக்கநாதர் மனமகிழ் மீனாட்சி

[ஜெகஜனனீ]

## சரணம்

பாண்டிய குமாரி பவானி அம்பாசிவ
பஞ்சமி பர மேஸ்வரி
வேண்டும் வரங்கள் கொடுக்கஇன்னம் மனம்வல்லையோ?
வேத வேதாந்த நாதஸ்வரூபிணி

[ஜெகஜனனீ]

பாட்டு எண் : 29 கீர்த்தனை : 17

தரு : பைரவி இராகம் ரூபக தாளம்

### பல்லவி

மாதேஅவர் செய்த வஞ்சனை மறப்பேனோ எந்நேரமும்
மருவியணைந்த சுகத்தை மனதினிலே எண்ணாமல்

[மாதே]

### அனுபல்லவி

பூதல மெங்கும் புகழ்படைத்த புண்ணியவான்
முத்தய்யன்பூபாலன் அருளிய
நாதனாம் எல்லாக் கிராமபத்திரசாமிக்கு
நியாயமாய்ச் சொல்லடி

[மாதே]

### சரணம்

மங்கள மாகச்சுக்கிர வாரத்திலே மாலையிட்டு
மலரணைய என்னைக்
கங்கணங் கட்டியது முதலிப்போ கண்டகண்டபேர்
நகைக்க இடமாகப்
பெண்கள் எதிர்க்கநான் கண்கலங்க மெத்தச்
சங்கைஇல் லாமலே
வங்கைகள் செய்தாரே எங்கேஅடுக்கும் இந்தநடத்தைக
ளெனக்குபுத்தி வரச்சொன்னாரடி

[மாதே]

சொந்தமாகவே இருந்து மெத்தவும் சொகுசாய்ச்
சுரதவி னோதங்கள் செய்தார்
அந்தரங்க மென்றெண்ணி நம்பினேன் ஆனாலும்
எனக்குத் துரோகம் செய்தாரடி
எந்தநேரமடி விந்தை செய்தாரடி எந்தநாளிலும்
சொந்தம் விடா தடி
வந்தனஞ்செய்து வணங்கி இருக்கமன தில்லையே
தலையி லெழுத்தே அடி

*[மாதே]*

*பாட்டு எண் : 30* *கீர்த்தனை : 18*

*தரு : பியாகடை இராகம்* *ஆதி தாளம்*

## பல்லவி

*காமதேனு ஐந்தருவென வளர்ந்து பெருகும் கையனே*
*சொர்ணம் பொழியும் மெய்யனே ஸ்ரீமானே*

*[காமதேனு]*

## அனுபல்லவி

*நல்லனே மானே தியாகவா னுன்போலே உண்டோ?*
*காமமே லாபமேதரும் கச்சிக்கல்யாண நாகேந்திரனே*

*[காமதேனு]*

## சரணம்

*தீரனே தேவாஞ்சை யாய்விளங்கும்-மா*
*வீரனே அலங்க்ருத சிங்காரனே சீலனே*
*குபேரனே ஆரனே தாரனே*

*[காமதேனு]*

பாட்டு எண் : 31 கீர்த்தனை : 19

தரு : பந்துவராளி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

தில்லைச் சிதம்பர சிற்சபை தரிசனை கண்டும்
சிந்தனைக ளுண்டோ ஆனந்தா தீதமான
[தில்லை]

### அனுபல்லவி

தொல்லைக ளணுகாது இனியேது சூதும்வாதும் நடவாது மனமே
அல்லாதது பரிபூர்ண மானஅரு வுருவகண்ட மயமான
[தில்லை]

### சரணம்

செல்லாது ஜெகப்பிரம மயக்கம்வெகு பொல்லாது
புதுமையான வாழ்வு
நில்லாது நிர்க்குண மொன்றே யல்லாது
அனுதினமும் நடராஜா
[தில்லை]

எந்நாளும் ஏகப்பிரம ஞானக் கண்ணாலே
கவலை தீர்ந்து
பண்ணாதே பாழ்நரகத் தில்விழவும் ஒண்ணாதே
உறங்காதே அருளொளியாம்
[தில்லை]

வையாபுரி முருகனை அருளிய அய்யா
சபாபதி பொன்னம்பலத்
தய்யாவந் தாடியே அடியவர்க்கு மெய்யான
வேதாந்த நாதா
[தில்லை]

நங்கை சிவகாமி சந்நிதி காணவே
    நன்மையிலே நிலைநாட்டும் மஹா
லிங்கத் திருமூல நாதரைச் சேவிக்க
    நெஞ்சிற் கவலையை ஓட்டும்

[தில்லை]

ரங்க சபைதன்னைக் கண்களால் காணவே
    அற்புதந்தானே பாராட்டும் சற்றும்
சங்கையில் லாச்சிவ கங்கையில் மூழ்கியே
    தானம்செய் வார்க்கின்
பங்காட்டும் சிவானந்தப் போதமே கூட்டும்
    முத்தியான முழுப்பதத்தின் முழுக்காட்டும்

[தில்லை]

பாட்டு எண்: 32 கீர்த்தனை: 20

தரு: பந்துவராளி இராகம் ஆதி தாளம்

### பல்லவி

தில்லையப் பாஉனது பஞ்சாட் சரப்படியில் சின்மயமாய்
தினம் தினமும் வந்துதரி சிப்பேனே

[தில்லை]

### அனுபல்லவி

கல்லையப் பாஇல்லை கண்டவெளி யும்இல்லை
காரணமும் இல்லையே அகண்ட வெளியில்
இல்லாத சங்கல்ப விகல்பங்களும் கண்டதில்லை
எதிரில்லாமல் வாழ்நந்திக்கும் ஏகாந்த மயமான

[தில்லை]

### சரணம்

ஆனந்தத் தாண்டவமு மாடியே—எங்கும்
அருள்திரள் பெருக விளை யாடியே
மோனந் தரும்பக்தி முக்தியுந் தான்கொடுத்து
மூர்த்திகர மாகநல்ல ஆர்த்தியுட னேமிகவும்

[தில்லை]

பொன்னம் பலசபையில் போற்றுவேன்—எங்கும்
பூர்ண போதமாய் மனத்தை ஆற்றுவேன்
அன்ன நடை யுமைக்குகந்த ஜோதிர்மய மாகிநின்ற
அம்பர சிதம்பர நிரந்தர நிரஞ்சனமே

[தில்லை]

பாட்டு எண் : 33 கீர்த்தனை : 21

தரு : சங்கராபரண இராகம் ஆதி தாளம்

### பல்லவி

லட்சுமி சமேதரென்று மனதினி லெண்ணி
லட்ச பட்ச பாதஞ் செய்யலாமோ?
[லட்சுமி]

### அனுபல்லவி

லட்சுமி நாராயண விருது பெற்று
லட்சம் பொன்பத்து லட்சம் தந்தீரோ
[லட்சுமி]

### சரணம்

பேதமே நானென்றெண்ணிப் பெருமைசெய் யாமலிப்படி
பேதவேதமா விசித்திரம் பிரபலமாகச் செய்யலாமோ?
நீதி தவறாத நித்தியானந்த மூர்த்தியே
ஏதுகாணும் சூதும்வாதும் ஏனிந்தப் பிரகடமுந்
தோதகங் கட்டிக் கட்டி யாடுகிறீர்?
தோகைய ருடையபாவ முமக்கு வேணுமோ?
[லட்சுமி]

பாட்டு எண்: 34 — கீர்த்தனை: 22

தரு : சங்கராபரண இராகம் — ஆதி தாளம்

### பல்லவி

நல்ல நல்ல நிலவும் பறிபோகுதே
நான்என்ன செய்வேன் பாதகி

[நல்ல நல்ல]

### அனுபல்லவி

சல்லாப மாகவே வசந்த காலத்தில்
சௌந்தர ராஜரைக் காணாமல் வீணே

[நல்ல நல்ல]

### சரணம்

செண்டு முலை திரண்டு விம்முதடி
செண்பகப்பூ வாசனையுங் கம்முதடி,
பண்டு நினைத்த பருவங் கும்முதடி
பார்க்கில் உடம்புமயிர்க் கூச்சல் மீறுதடி

[நல்ல நல்ல]

காதலென் னெஞ்சினுள் மெத்தவே யாறுதே
காமன் கணையுங் கனன்று முன்னேசேருதே
வேதனை யாகமெய் மெலிந்து சோருதே
மேலென்ன செய்வேனடி மய்யல் மீறுதே

[நல்ல நல்ல]

முருகேசன் மாமன் இங்கேவந்து பாராரோ?
முறைமையாகக் கிட்டநேரே வாராரோ?
இருகையா லணைத்து முத்தந் தாராரோ
என்னைப்போ லெத்தனைபே ராராரோ

[நல்ல நல்ல]

பாட்டு எண் : 35 கீர்த்தனை : 23

தரு : அடாணா இராகம் ஆதிதாளம்

## பல்லவி

சும்மாசும்மா வருகுமா சுகம்
சும்மாசும்மா வருகுமா சுகம்

[சும்மா]

## அனுபல்லவி

அம்மம்மாஎன் றிருந்ததினால் ஆவதென்ன
ஆண்டவனைத் தெரிந்துயார்
இம்மாத்திரம் நீசெய்தால் சௌந்திரராஜர்க்
கிரங்கும்அமோகம் வைபோகம்திருவடி

[சும்மா]

## சரணம்

அந்தி நேரந்தன்னில் முந்திக்கொள் பெண்கள்கண்ணில்
சந்திக் காமலே நீவந்து வாழ்ந்துநின் றால்
மந்த மாருதமும் அந்தவேளை நேரும்அந்த
நந்தகுமா ரனை நயந்து வணங்கா மலே

[சும்மா]

பாட்டு எண்: 36 கீர்த்தனை: 24

தரு : அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

பூவராகரே பரிபூர்ண போதமா தவரே

[பூவராகரே]

### அனுபல்லவி

சேவையுந்தந்து ஆதரித்து வெகுதிவ்வியமாய் சிரஞ்சீவியாய்
ஈகையில் கர்ணன் கச்சிக்கல்யாண ரெங்கனுக்குக் கிருபைசெய்யும்

[பூவராகரே]

### சரணம்

வைபவமும் வெகுசெல்வமும் தழைக்க
வல்லபமும் மகிமையும் மிகக்கொடுத்து
வாசுதேவரே வைகுந்தரே வடமலையாரே முகுந்தரே
தெய்வம் நீரல்லாமல் ஜகதீசனும்
வேறேயுண்டோ யாதவ சீலமாய் ஜயமாய்
வரமும்திறமுட னேவிளங்கக் கிருபைசெய்யும்

[பூவராகரே]

வாமனரூ பரேஎங்கள் வனத்துளப மாலையாரே
கோமளரே கோவிந்தரே கோகுலதாரி யேயுயர்
சாமள வர்ணரே செந்தாமரைத் திருக்கண்ணரே
நேமம்உம்தம் பக்தனையும் நிலையாக ரட்சணை செய்யும்

[பூவராகரே]

எம்பெரு மானே எப்போதும் ஏகநாதனே
உம்போல்தெய் வம்உலகில் வேறுண்டோ சொல்லும்

அன்புடனே மிச்சமாக அர்ச்சனைசெய்த அடிமைக்குத்
தெம்புடன் வச்சிரகாயம் ஸ்திரமுடன் விளங்கச்செய்யும்
[பூவராகரே]

வேல்முருகன் மாமனே வேதாந்த வேதியரே
மாலம்புஜ வல்லியுடன் மாயனே என்றைக்கும்
மேன்மைக் கச்சிகல்யாண ரெங்கனுக்கே கடாட்சமும்மைப்
போலெவர்க்கும் கிடைக்குமோ பூமண்டலத்தில் உண்டோசொல்லும்
[பூவராகரே]

பாட்டு எண் : 37 கீர்த்தனை : 25

தரு : அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

இந்துரவி யைப்போல முளைக்குதே என்செய்வேன்
கந்தனது துணையுங் கடாட்சமும் மேலுண்டு
கச்சிக் கல்யாண ரெங்க ராஜனே

[இந்துரவி]

### சரணம்

மதியை மயக்க மையல் பெருக்க
மதனப் பயலு மீசை முறுக்க
சதிசெய்து செய்து என்னையும் உருக்க
சர்வ காலமும் கணைகள் நெருக்க
பதியை நினைந்து பாலனஞ் செருக்க
பாங்கிய ரெல்லாருமாய் வந்து இருக்க
அதை யறிந்து குயில்கூவி உருக்க
சாமிஎன் மேல்உமக் கித்தனை சுருக்க

[இந்துரவி]

கண்கள் கலங்கக் கலசம் குலுங்கக்
கலைகள் அவிழ்ந் தவிழ்ந்து நலுங்கத்
தண்களப க் குங்குமந் துலங்க
தங்க பாத சரங்கிலு கிலுங்கச்
செண்பக மலர் சொரிக் கிலங்க
தேகங் காமக் காச்சலில் நலுங்க
பண்புடன் மெட்டி யோசை கலகலெங்கப்
பலன்கை வரமேல் வரலா மிதுமலுங்க

[இந்துரவி]

கந்தர் சொந்தனைக் காக்கும் உந்தனைக்
கச்சி கல்யாண ரெங்க தீரனை
தொந்தனை செய்யா தேயும் எந்தனை
தினம் தினம் பாருமே சுகந்தரும்
செந்தேன் மொழியைக் கேட்கவந் தேனே
தேவையான போதெல்லாம் வந்திருந் தேனே
வந்தனஞ் செய்து வணங்கி யிருந்தேஎன்
வடிவும் இளமையும் மிகத் தந்தேனே

*[இந்துரவி]*

பாட்டு எண் : 38 கீர்த்தனை : 26

தரு : அடாணா இராகம் ரூபக தாளம்

### பல்லவி

திருவொற்றியூர்த் தியாகராசர் சித்விலாச நாதனடி
[திருவொற்றியூர்]

### அனுபல்லவி

பருவத்தில் தனத்தில்முலை பந்தடித்தே தடித்தே எழும்பும்
உருவத்தின் மகாநடனமும் ஓகோஓகோ நானென் செய்வேன்
[திருவொற்றியூர்]

### சரணம்

பார்த்தகண்கள் பார்த்ததுபோல் பார்த்தவிட மெல்லாம்எனக்குத்
தோற்றுதடிஎன்ன சொல்லுவேன் தோகையேஒரு வழிசொல்லடி
ஆத்திரத்தால் மனம்பதறி ஆசையாகி மதிமலிந்தேன்
தோத்திரஞ்செய் தவர்க்குமெனக்கும் சொந்தம்விடா மல்நீசெய்
சுகிர்தமுண்டு
[திருவொற்றியூர்]

பாட்டு எண் : 39 கீர்த்தனை : 27

தரு : அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

மகமேரு மகராஜனே சத்திரபதி
மகமேரு மகராஜனே சத்திரபதி

[மகமேரு]

### அனுபல்லவி

வெகுராஜர் களுங்கப்பங் கட்டும்ரெங்க பூபன்பாலன்
மென்மேலும் விளங்கும்கச்சிக் கல்லியாண ரெங்கசாமி

[மகமேரு]

### சரணம்

பாரினில் துராதுரையே பங்கயக் கண்ணனே சாமி'தன
மாரியாயி தங்கக் கையாலே மகிமையாய் வரிசையாய்அவர்
வாரியாக வேபொழிந்து அவரவர் ஆனந்த மாகத்தாரி
பாரிகள் தெரிந்து சகல சம்மானஞ் செய்யும்

[மகமேரு]

கலிகளுமை நினைந் தவர்க்குக் கனவிலும் அண்டாது
சலியாமல் வஸ்திர பூஷணமும் சௌக்யமும் தந்தப்பல்லக்கும்
வலிவினில் துரிகீதையும் நீயும்வகை வகையாகச் சிஷ்டருக்குப்
பலாபல வென்றே கொடுத்துப் பண்புடன் கீர்த்திபெற்ற

[மகமேரு]

வனமயில்மே லேறும் வடிவேலர் கிருபை படைத்த
கன நயந் தேசிகந் தமிழ் கணக்கில்லாம லாதரிக்கும்
தினகரன் போலே என்றைக்கும் செல்வம்வளர்ந் தேபெருகும்
இனங்கொடுக்குங் கச்சி கல்லியாண ரெங்கஸ்ரீ ரங்கனே

[மகமேரு]

பாட்டு எண் : 40 கீர்த்தனை : 28

தரு : அடாணா இராகம் ஆதி தாளம்

## பல்லவி

சக்கிரபாணி சாமிகிட்டே நினையாதே
வரமிகவும் நீ சொன்னையா

[சக்கிர]

## அனுபல்லவி

நிக்ரகனுக் கிரகஞ்செய்யும் நீலமேக சியாமளனே
சுக்ரீவனைக் காப்பாற்றின அச்சுதனே திருவிக்கிரம

[சக்கிர]

## சரணம்

வஸ்துப்பெரு மானைத்தவிர மகிமை வேறுமுண்டோ?
மஸ்துமீறி ஒருவார்த்தை வாய்பதறி நீசொல்லடி
பக்தியாகச் சன்னதிக்குப் பணிவிடை நீசெய்யடி
கஸ்தூரி ரெங்கனைப்போல் காலகாலங்களிலு முண்டோ துணை

[சக்கிர]

பாட்டு எண் : 41 கீர்த்தனை : 29

தரு: அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

பணிவிடைக் காகவே பாரினில் அவதரித்துப்
பகவன் தன்கிருபையை எப்போதும்படைத்தவனே
[பணிவிடை]

### அனுபல்லவி

வணிதமாக சௌந்தர ராஜப் பெருமான்
மகாமண்டபங் கட்டிவைக்கும் நின்போல்ராஜனுண்டோ
கணிசமுடனே தர்மங்களுக் கென்னையா ளாகச்செய்து
கருத்துக்குகந்தகச் சிக்கல்யாண ரெங்கராஜனே
[பணிவிடை]

### சரணம்

கல்லு வரிகளெல்லாங் கலகலத் திருக்குது
கருணை மழைபொழிய வேளையும்வந்தது
அல்லும் பகலும் அச்சுதனைச் சதாநினைந்து
ஆனந்த மாகவே விளங்கும்
புல்லர் முகந்தனிலே விழியாம லெனக்குப்
பூர்த்தியாக மாதைரியங் கொடுத்து
அல்லலில் லாமலேஎனை யாதரித்துக் காப்பாற்றும்
அகளங்கனே சதுரங்கதுரங்கனே இங்கிதமாய்
[பணிவிடை]

பின்னும் முன்னும் பாராமல்நான் நினைத்தபடி யெல்லாம்
பிரதிஷ்டையாக எனக்குவரங் கொடுத்தாய்
சன்னந் தோறுமிதே நடக்கும் பாவலர்க்கும் உன்போல்
தாராளமாய் யார் தனமாரிச் சொரிவார்?
இந்நிலத் திலுனைப்போல ராஜனெங்குங் கண்டதில்லை
என்னருமை அறிந்தஎன்பிரபுவே என் துரையே
புன்னமா சந்திரனைப் போல்பூர்ணமாக வாழ்ந்திருக்கும்
பூபனேபிரதாபனே சல்லாபனே கிருபாநிதியே

[பணிவிடை]

கல்லாக் கலைகள்கற்ற ராஜரிருந் தாவதென்ன
கானலோலனே கனம்கிருஷ் ணனுடன்
சொல்வாக் கைக்காக்கும் எங்கள் துரந் துரையே உன்போல்
சுகிர் தவானும் செகத்தி லாருமில்லை
நல்ல கிரீடந் தரிக்கின்ற மகராஜனே
நன்மைதெரிந்த பிரபுவேநவரத்தினம் வைத்திழைத்த
பல்லக்கும் தான்கொடுத்துப் பரிவுடன் கீர்த்திபெற்று

[பணிவிடை]

அரிய தவங்கள்செய்து குமரகுரு ஸ்வாமி
அருள்புரிந்தே சேர்ந்தே இருக்கும்
பெரியதுரை செய்ததிருப் பணிக்குறை வில்லாமல்
பெருமையா கவெனக்கும் பேர்கொடுத்து
மரியாதை களுந்தந்த கச்சிக்கல் யாணரெங்கனே
மன்னவனே மகிமையாய் என்னையாளும்
பரிந்துபிர பஞ்சம்பர மார்த்தமெல் லாம்தெரிந்தும்
பக்தியுடன் யுக்திசெய்து சித்திபெற்றுச்சுத்தனேநீ

[பணிவிடை]

பாட்டு எண் : 42 கீர்த்தனை : 30

தரு: மோகன இராகம் ஆதி தாளம்

### பல்லவி

சுந்தர மாகவே நவராத்திரிக் கொலுவிருந்த
விந்தையை என்ன சொல்வேன் - கொலு
விந்தையை என்ன சொல்வேன்

[சுந்தர]

### அனுபல்லவி

செந்தமிழ்க் கருள் குமாரன் ஒப்பில்லா
தேவேந்திரன் பெற்ற ஸ்ரீதரன் விஜயன்
ஒப்பில்லாத மழவ ராயதுரை

[சுந்தர]

### சரணம்

தங்கச்சரி கைநிறைத்த கட்டுப்பாகை அங்கிநிஜார்
தொட்டுச் சரிகை கடயம் பூட்டிப்
பொங்கமாய் மார்பில் பதக்கமணிந்து முத்துப்
பூணாய்த் திகழும் பாகைமீதிற் சூட்டி
மங்களஞ்சேர் புயத்தில் வைரத்தாயத் துடன்காதில்
மருவியஒண்டி முத்துக் கடுக்கனு மிட்டுராஜ
சிங்கமெனவே படைத்தலைவர் கத்தியுடனே சிந்தை
மகிழ்ந்திடவே கொலு மேடையில் வந்து
சந்ததமும் வளர்இந்திரன் போலவே-நல்ல

[சுந்தர]

எத்திசையும் அதிர் நவ பத்துடன் பேரிகைகளும்
இசை நாதசுர மேள நாதமும்
துத்திபுல் லாங்குழல் ஒத்துமத்தள வாத்தியத்துடன்
தோகையர்கள் நாட்டிய மாடும் வினோதமும்
வெற்றிபெற்றுச் சிங்கக்கொடி புலிக்கொடி யுடன்
எழில்மிகுந்த சாமரம்சந்திர காவிப்பா வாடைவீச
சுத்தவீரரா மல்லர்கள் ஜோடிகூடி விளையாடும்
சொந்தமிருந்து வருபுலவர்க் குயர்ந்தபொன்
மாரிவசந்தத் தியாகஞ் செய்யும்- நல்ல

*[சுந்தர]*

திக்கயங்க ளைப்போல துரைமக்கள் சூழவும்
பட்டுகள் செய்யுங்கை வரத தொனிமீற
பக்கிரிக் காளைகொடுத்த பாட்சா சத்திரபதி
யென்று பாடுநன் னாவலர்கள் கூற
மிக்க மதிமந்திரி அட்டவணையர் தளகர்த்தரும்
மேவு சாமாதிகர் தானாபதி காரியக்காரரும்
தக்கசேர்வை காரருடன் வெகுஜெனங்கள் காணவே
தண்டமிழ்க் கருள் போஜனெனப் படிகள்
கொண்டு களிப்புடன் மண்டலமதிரவே — நல்ல

*[சுந்தர]*

விளங்குந் தீவட்டி சலாத்திலுபய நாணுக்களும்
மெட்டு மெட்டாய்ப் பட்டாணி மார்களும்
களங்கமில்லாத யானை மாவுத்தருடன் ஒட்டகைக்
காரருங் கண்டு சலாஞ் செய்ய
வளம்பெறு கொங்கை மடமாதர்க ளிருபுறம்
வண்மையுடன் ஆரத்தியேந்தி வாழ்த்தியே சுத்த
உளந்தெரிந்து கட்டியங்கார ரெச்சரிக்கை சொல்ல
ஒளிவுடன் வாண வித்தைகள் மிகுந்திடவே
உடனிடியென வரும்வெடிகளும் போடவே- நல்ல

*[சுந்தர]*

பாட்டு எண்: 43 | கீர்த்தனை: 31

தரு: அடாணா இராகம் | திரிபுடை தாளம்

## பல்லவி

வகுளவன வாசரே முக்த புரீசரே
வளமாய்ப் புத்திர சந்தானம்
வலுவாய்க் கொடுக்கும்

[வகுள]

## அனுபல்லவி

மகிழ்ந்தே வரமுதவும் குசுமகுந் தளாம்பிகைக்கு
வரிசையான ஜோதியே
மகிமையுடன் கச்சிக் கல்யாண ரெங்கனுக்கு

[வகுள]

## சரணம்

கோரும் அடிமைக்கொரு குறைவில் லாமலே
நூறுவயது வாழ்ந்து நோய்ப்பிணிகள் அணுகாமல்
பேரும்ஊ ரும்விளங்கும் பெருமையும் பிரதிஷ்டையும்
தாரும்தாரும் சாமிகருத்துகள் தயவுடனே எப்போதும்

[வகுள]

கற்பனை நீரல்ல காரணம் வேறுண்டோ
பொற்பதந் தனிலின்று புங்கானு புங்கமாய்
அற்புத மாகவே அர்ச்சனை களும்செய்த
விற்பன னுக்குநன் றாய் வேண்டியதெல் லாம்தந்து

[வகுள]

எங்கள்வடி வேலரை ஈன்றசர் வேசரே
சங்கையில் லாமலே சர்வகாலங் கல்லியாண
ரெங்கன் மனப்படியே ரட்சிக்கும் நாதரே
சங்கர சிவசம்போ மகா தேவனே

[வகுள]

# பாலகவி சண்பகமன்னார்

# கீர்த்தனைகள்

பாட்டு எண்: 44 கீர்த்தனை: 1

தரு: நாட்டை இராகம் ஆதி தாளம்

### பல்லவி

நாமகள் கொலுவிருக்கும் விந்தையை
நாவினால் தெரிந்துரைக்கக் கூடுமோ?
பூமகளை மணிமார்பில் தரித்திடும்
புலவர் போற்றிமகிழும் மாயன்

[நாமகள்]

### அனுபல்லவி

மாமறை புகழும் உந்திக்கமலந்
தன்னில் உதித்திடும் போதுன்
மாமன் மகிழ விளங்கும்
என்றன் தகைமைக் குழலே

[நாமகள்]

### சரணம்

மதர்விழி யரிவையர் தனந்தனில்
நயந்து அனுதினமும் துரியமிடும்
புகர்மதியினில் இழிவடைந் தெயில்தனியன்பு
பூண்டெனை ஆண்டமறை கண்டரிய

[நாமகள்]

கஞ்சமலரை வென்றதாளினைக் கருதிக்
கசியும்அன்பர் கடிமலர் கொடர்ச்சித்து
அஞ்சொன் மாதேயருள் புரிவாயென்றுகூற
வருள்புரிந்து தரளமுறுவல் திகழ்ந்திட

[நாமகள்]

பாலிலிலிய பனிமொழி அரம்பையர்
    பரதநூலின் முறைகளோடு நடித்திட
மாலைவென்ற மாமுனிவர் துதித்திட
    மணிகளிழைத்த அணிகொ ளரியாசனத்தில்

[நாமகள்]

தேசுலாவு விஞ்சையர்கள் யாழிசைதிகழ
    நவில்வெகு சுரிகள் மறைதுதிக்க
மாசிலாத பாலகவி சண்பக மன்னார்
    மனையில்வளர் வனசமலரில் உதித்திடு

[நாமகள்]

பாட்டு எண் : 45 — கீர்த்தனை : 2

தரு : கௌளை இராகம் — ஆதி தாளம்

### பல்லவி

பாரதியே அருள்புரிந்து பாரம்மா [பாரதியே]

### அனுபல்லவி

சீருலாவு செங்கமல மேலுறைந்து
திகழுநான்முகன் மலர்ந்து மகிழ்ந்திடப்
பார்விண்ணோர் பனிமலர் கொடர்ச்சித்துப்
பதங்கள்போற்ற நிதமுகந்து கொலுவிருக்கும்
[பாரதியே]

### சரணம்

சந்திரர் இந்திரன் நன்னிதியே
ஐந்தொரு மந்திரி யெனவணுகி
மந்திர வந்தனை யாகத்துதித்தேன்
[பாரதியே]

சிந்தை மகிழ்ந்திட அருள்செய்யினும்
மைந்து மனந்தனி லுதித்த
சிந்தை யாவு மகற்றி
[பாரதியே]

நானற்புதமா செய்யதாளிற் பணிவிடைசெய்ய
ஆனைத் திருவடி உய்யஉளமுடன்
அனுதின மும்உன தருளைத்துதிக்க
[பாரதியே]

வீசுகதிர் மணிகள் விளங்கவே இழைத்த
மாசிலாத மஞ்சத்தில் மதிவல் லோர்கள்
துதிகள் செய்ய வேவிளங்கும்
[பாரதியே]

மந்தகாசம் துலங்க மதிமுக மிலங்கச்
செந்தமிழ் பாலகவி செண்பக
மன்னார்க்கருள் செய்யும்
[பாரதியே]

பாட்டு எண் : 46 கீர்த்தனை : 3

தரு : ஸ்ரீராகம் திரிபுடை தாளம்

## பல்லவி

இனித்தாமதம் ஏனம்மா? என்றனைக் காக்க
இனித் தாமதம் ஏனம்மா?

[இனித்தாமதம்]

## அனுபல்லவி

வானத்தவர் முதலாய சனித்தமாவை நினைத்தபடி
வரமினி தருள் புரிய
கனத்தமால் சிங்காதனத்தில் கொலுவமர் காரணியே
தாரணிவாரணி நாரணிபுகழ் பூரணி ஆரணிவாணி

[இனித்தாமதம்]

## சரணம்

சுரர்முனிவர் கின்னரரொடு மிகத்தருவினா ளடிபரவியேது
பரதநூல் வழிசந்தியான் மிக்கஊர்வசி தான்நடிக்கச்
சுரமுனி வருந்தும் புருவுங் களிக்க
இருபுறமும் பயில்வரி வீணை தொனிக்கப்
பொருவிலாத அடியவர்மனத் தில்நினைக்க போதனமே
மாதரியா தன்மீதுகந் தருள்மூவுல காதாரபூதி

[இனித்தாமதம்]

கனவுபோலவே நனவினி லுதித்தமனித வாழ்க்கையை
இனிதென வேமெத்த மனதில் அமைத்து
புனிதநெறி பொய்த்தஎன்னை அளிக்க மதித்த வனச மலர்போல்
நயனமதிமுகத்த பனிநிலா மதிதனை முடிதரித்த

சனகாதியர் அனுதினமுன் வைத்ததா மரைவெண்
மாமலர்மீதுறு பூமலரவனும் பிரமனும் அன்னே

[இனித்தாமதம்]

சந்ததமு மகந்தைகள் தவிர்ந்து கந்தமாலை
வனைந்தடி புனைந்து வந்தனை புரிந்த
மனந்தவர் மன்னி நினைந்தருள் புரிந்தே
சிந்தை மகிழ்கொளு கந்த நீதியே
முந்த நான்மறை தந்த வேதியே
பசந்த னேனுள் வளர்ந்த சோதியே
பண்பென வேவிண் புரியோர் புகழ்
செண்பக மன்னார்க் கின்பவரம் செய்யும்தாயே

[இனித்தாமதம்]

பாட்டு எண் :47 கீர்த்தனை : 4

தரு : பியாகடை—இராகம் ஆதி தாளம்

### பல்லவி

திவ்ய தரிசனங்கண்டு சேர்வைகொண் டேனடிமானே
தேகமே சோகந்தீர்ந்து ஜென்மம் சாபல்ய மாச்சு
[திவ்ய]

### அனுபல்லவி

பவ்வந்தனிலும் பாரினும் பங்கயந் தனிலுதித்த
வெவ்வினை தீர்க்கும் ஸ்ரீரங்கநாயகி மணாளன்கொண்ட
[திவ்ய]

### சரணம்

வேதியர் வேதகோஷமும் வெம்பரிதி போல்கொடையும்
வெண்தரளத் தால் நிறைத்த
கொண்டையும் பின்னலின் கொச்சும்
ஆதிசெக மோகனாவ தாரமாய் எழுந்தருளும்
அழகுமருள்பெருகி வழியுங்கஸ் தூரிப்பொட்டும்
மழைமுகிலென வருமழகிய மணவாளன்
[திவ்ய]

பட்டப் பகல்போல் தாகிரி பந்தங்கள்
இருபுறமும் பாங்குடன் வெள்ளைத்
தடியோர் ஓங்கியே கட்டியங்கூற
அஷ்டதிக் கஜங்கள் போல்அன்பர்கள் ஸ்ரீபாதம்தாங்க
அசைந்துவரும் ஒய்யார நடையழகும்
இசைந்துசெங் கையின்பசுங் கிளிதுலங்க
[திவ்ய]

மாதர் முலையாயர் வீட்டில் வாரிவெண்ணை
யுண்ட கனிவா யிதழும்
பசுந்துளப மாலையணிந்த மார்பனே
மாதவர்வேதன் தேவேந்திரன் மறலியை யுதைத்தகாலன்
மகிமையான கருடமண் டபத்தில்
வந்தகமகிழ்ந்து தேவாதி யுடன்பணியும்

[திவ்ய]

மஞ்சுலவு தேன்கமுகு வாழைகள் வயல்நிறைந்து
மாநதி காவேரி சூழும்
மாமதில் அரங்க நகரில்
பஞ்சணையாய் அரவில் பள்ளிகொள் ஸ்ரீரெங்கநாதன்
செஞ்சொல் பாலகவி செண்பகனார்
தமிழ்ச்சொல் கேட்டருள்செய்யும் ஜெகதீசன்

[திவ்ய]

பாட்டு எண்: 48 கீர்த்தனை: 5

தரு: பந்துவராளி இராகம் கண்டசாபு தாளம்

## பல்லவி

பரமபத வாசலில் எழுந்தருளி வருஞ்சேவை
பாக்கியத்தைக் கொண்ட பேர்க்குப்
பாரினில் பிறவி யுண்டோ
சிரமபத மனதேயா தீவினைத் துன்பங்கள்
தீர்த்துசே வடிகளாகக் கொள்ளுந்
தேவனாம் ஸ்ரீரெங்க நாதரை

[பரமபத]

## அனுபல்லவி

அஷ்டதச வாத்தியம் அகண்டமுழு துமதிர
ஆரண கோஷ நிறைந்
தண்ட ருல கதிர
சிஷ்டர்கள் தேவாதி தேவர்கள் தேமலர்
மழைசிதற சின்மய மாய்விளங்கும்
ஸ்ரீஜகத் வைகுண்ட வாசரே

[பரமபத]

## சரணம்

கொந்தபரி மளஞ்சூழ் கஸ்தூ ரணிமலர்கள்
அணிந்தபைந் துளபமாலை கௌஸ்துப மணிதுலங்க
சந்திரவாவி சூழநின்று சிந்தனைசெய் அன்பர்கட்கு
உகந்துமந்த காசத்துடன் வந்தருள் கொடுக்குமாயன்

[பரமபத]

பைந்தமிழ் மறைதிவ்வியப் பிரபந்தம் ஓதியபதின்மர்
வந்து பணிந்திடும் அனந்தசயனன் போதன்
செந்தமிழ் பாலகவி செண்பகமன் னார்தமிழுக்கு
கந்துபக்தி பாக்கியம் மிகுந்தளிக்கும் ரங்கநாதன்

[பரமபத]

பாட்டு எண் : 49 — கீர்த்தனை : 6

தரு: சங்கராபரண இராகம் — ஆதி தாளம்

### பல்லவி

தேவாதிதேவா உன் திருவருள் மகிமையை அறிந்து
தெரிவிக்க வேணுமென் றால் அயனாலுந் தரமோ
[தேவாதி]

### அனுபல்லவி

பாவாணர்கள் மிகுந்துபரவும் அரியா புரிவளர்
ஏவலவா ஸ்ரீராகவா இரங்கிஎந்தனுக் கருள்புரிந்திடும்
[தேவாதி]

### சரணம்

பண்டுகோ வர்த்தனத்தால் பனிமாரி காத்தாய்
அண்டர்தன் மனையில்வளர் அணிகிளர்மா முகிற்கொழுந்தே
பண்டிக்குள் ளேயுலகு பதினாலும் வைத்தருளும்
மண்டு புனற்றிரை மீதினி லேதுயில்
கொண்டவனே வெண்ணை யுண்டவனேசர்வ
[தேவாதி]

சோதிமருவுஞ் சுடருந்துக டீர்மதியும் வானமும்
மாதிரங்கள் பரித்திடும் மணிமௌலி வானவரும்
வேதவே தாகமங்களும் வேறுளதோ நின்னருளன்றிப்
பாதமலரைப் பணியு மன்பர்க்கினி பங்கயக்
கண்ணருள் பொங்கு மமுதே
[தேவாதி]

கன்னல்கமு கெழில்காட்டும் கதலிமாவருக் கைகளும்
இன்னெழிற் கோபுரமும் இலங்குமணி விமானமும்
சொன்னமதில் சூழ்ந்து துலங்கும் அரியா புரிவளர்
நன்னய மாகவே நாற்கவி சொற்றிடும்
ஞாலம் புகழ்ந்திடு பாலகவிக்கருள்
[தேவாதி]

பாட்டு எண் : 50 கீர்த்தனை : 7

தரு : சங்கராபரண இராகம் ஆதி தாளம்

பல்லவி

மதனகோ பாலாஉன்னை மருவி விரகங் கொண்டோர்
மடந்தை நிதமுமிங்கே நடந்துவந்து காக்கிறாள்

[மதன]

அனுபல்லவி

பதும வேதன்முதல் தேவ ரனுதினம்
பரவுமிந்திர புரமிணைந்த பெரும்புரி பதிவளர்
அமுத வல்லிபுணர் பாங்கனே தேங்கொள் மாலைமார்பனே

[மதன]

சரணம்

மாலைக் கருங்குழலோ மதனனாடும் பொழிலோ
வாணுதலோ சிலையோ மனத்தைச்சொக் கும்வலையோ
சேலோ வரிவிழியோ தேனோ கனிமொழியோ
செப்புந் தனங்கனகச் செப்போ மதனவைப்போ
சிற்றிடைமின் றொடைக்கு நிகரெங்குந் தேடவரிது
வாடை பெரிதென்றென எண்ணியே உனை நினைக்கும்

[மதன]

பலவித லீலைசெய்வாள் பாட மதனசாஸ்திரம்
பருவமங்கைச் சிங்காரப் பனிமொழியார்க் குந்நேத்திரம்
கலைமதி முகந்தன்னைக் கண்டார்க்கும் பெருகும் தோத்திரம்
காமனற்ற உனது கலவிக் கவளேபாத்திரம்
கந்தசந் தனந்திமிர்ந்து கிளகி வளர்ந்திணைந்த
தந்தனங்கள் தந்து கந்து

[மதன]

சகல விபவ பரந்தாமா கானலோலனே
தாமரை வாழ் பொன்மனந்தனை உருக்குங் கோலனே
செகமகிழ்ந் திடுவசு தேவனருள் பாலனே
செண்பக மன்னார்க் கருள்செய்யுங் குணசீலனே
தெந்தனம் புரிந்திடாமல் இவட்கிதழ் தந்தணைந்து
சிந்தை மகிழ்வி நந்தநந்த வெழின்

[மதன]

பாட்டு எண் : 51 கீர்த்தனை : 8

தரு : அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

மதன்கணை யாலே நொந்தேன் எந்தன்
மாதுவாடி மயங்கித்தேடிச் செல்வான்
கூடித்தன கலவிகள் செய்ய [மதன்]

### அனுபல்லவி

மதுமலர் மேல்வாழி மாசின் மால்திரு
மாமகள் புணராடு மாக்கட லமுதே
நின் வளங் கண்டு
[மதன்]

### சரணம்

வடிமாவின் தளிராம் பொற்போதின்
மதினுத் தனங்கை நிகரா பொற்சேல்
வாடிடையீறில் சந்திரனே சொல்லிலாசை பூண்டமையாலே
சதா இந்துரவியா பொற்பக
[மதன்]

கன்றாலும் அணைந்தே கொக்கோகக் கலவிகள்
செய்ய நினைந்தே மைக்கோலக் காமநீலக்
கண்துயிலாகிப் புல்லுங் காரில் கண்கள்விழித்து
இன்பந் தானா எப்போதும்
[மதன்]

அவனி மாதின் பணியாற்போல் பேழை
அஞ்சிறு புலிநகர் வாழ் நற்றேவே
ஆதார மாகச்சொல்லும் செண்பக மன்னார்சொல்லும்
பாவிக் கின்னருள்செயும் அருண்மாநற் கடலேஎக்காலும்
[மதன்]

பாட்டு எண்: 52 கீர்த்தனை: 9

தரு: அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

திருமரு மார்பா உனதுமகிமை ஆர்தெரிந் துரைக்க
வல்லார்? தேவாதி தேவா [திருமரு]

### அனுபல்லவி

மருமலர்ப் பொழில்கள் சூழும்
அரியில்மா நகர்தன்னில் மேவிய
நரசிம்மமே தேவர் பிரமனிசை
நாரத முனி முதலோர்
ஆரணங் களுக்கு மெட்டாத

[திருமரு]

### சரணம்

பொருளினாசை மண்ணாசை பொற்பணிகள்
பூண்ட மங்கையர்கள் தன்னாசை
இருநற் கடிந்தனிகள் போலங்கை இருந்து
இருந்தும் பெரியோர்க ளன்றி
நரகாசுர சம்ஹாரா தேவநாதா
அனாதபோதா வேதவே தாந்ததீத

[திருமரு]

அன்றினர்களைப்போல் அடுத்தவர்க்
கொன்றாமென்றும் அல்லவென்றுஞ் சொல்லாமல்
நின்உடம்பும் மீசையும் வயறும்
பார்த்துநிகர் நமக்கில்லை யென்று
களித்திடும் மட்டிக் கரணைகள் தங்களிடத்தில்
கவிபடித்துக் காத்தலையாய் மாலோன்
கண்ணாய்ப் பார்த்துக் காத்தருள்

[திருமரு]

பாட்டு எண் : 53 கீர்த்தனை : 10

தரு: அடாணா இராகம் ஆதி தாளம்

### பல்லவி

புருஷோத்தமன் ஸ்ரீவைகுண்ட தர்மன்
பக்தபரி பாலனஞ் செய்யும்

[புருஷோத்தமன்]

### அனுபல்லவி

வருஷஞ் சொரியும் மலையைக் குடைபிடித்து
மாநிரைகள் காத்த கொண்டல்வண்ணன்
நிருதர் குலத்தை வேரறுத்தமாயன் நிக்ரகனுக்
கிரகஞ் செய்யும் சக்கிரபாணி சாமியான

[புருஷோத்தமன்]

### சரணம்

தேவர்க் கமுதமீந்த தேவாதி தேவன்
தேசங்க ளெங்கும் ஓரடியாய்அளந் துண்டவன்
மூவுலகங்களும் முக்குடை யாய்மாவலி மன்னனை
மூவடிமண் கேட்டளந்த வாமனாவதாரனான

[புருஷோத்தமன்]

பில்லி சூனியங்கள் முதல்கொல்லும் முறைப்பாடுநோய்
வெல்லுங் குன்மம்கசம மேவும்பெரு வியாதியும்
நல்லசெவி டுமைமலடுடன் தகும்துர்வினை யாளர்கட்கு
அகற்றிவிட் டருள் கொடுக்கும்

[புருஷோத்தமன்]

இங்கிதமான செந்தமிழ் பாடியே அரங்கேற்றுஞ்
செண்பக மன்னார் சாற்றுங் கவிதன்னையும்
தங்க மலர்த்துரையும் விஜயவல்லி மருவும்
தாழ்வில்லாக் குடந்தை தன்னில்வாழ் திருவாழிகளான

[புருஷோத்தமன்]

பாட்டு எண் : 54 கீர்த்தனை : 11

தரு : பைரவி இராகம் ஆதி தாளம்

## பல்லவி

சகியே அழைத்தோடி வாடி தாமதஞ் செய்யாதே
தருணம் இதுபோதே

[சகியே]

## அனுபல்லவி

மகபதி பிரமன்மா முனிவர்கள் போற்றுமகிமைச்
சிறுபுலியூர் வாழும் அருமாக் கடலமுதனே

[சகியே]

## சரணம்

சோலைக் குயிலால்மனம் நோகுதே அந்தத்
தோதக மதன்வர லாகுதே எந்தன்
சேலைகளும் நழுவிப் போகுதே அவரைச்
சேராமல் இந்த இரவும் யுகமாகுதே
திருக்கு முருக்குஞ் செய்யாதே இப்போதே
அரைட் சணமே தரித்திருக்க வசமல்லடி

[சகியே]

தென்றல் புலிபோல சீறிவந்ததே இளஞ்
செங்கை வளையுங் கழன்று சிந்துதேமதன்
மன்றல் கணைகள் தைத்து நொந்ததே எந்தன்
மனங் கலங்கிக் கண்ணீர் சிந்துதே விண்
மதியுந் தழல்போல் காயுதே இந்தவேளையில்
சதி செய்யாமல் மதியுகந்து தேடி

[சகியே]

பக்தர் பரவுஞ்சிறு புலியூர் வாழும் மாயனே
பாங்காய் இக்கவிசொல் பாலகவிக்கருள் ஆயனே
அத்தமணி யணியுங் கோசலைமகிழ் சேயனே
அகிலம் ஈரேழுமுண்ட செங்கனி வாயனே
அருமை யானதிருப் பாற் கட லமுதனே
மருவி மலரணையிற் பிரியா மலேஇருக்கநீ

[சகியே]

# பாலசரஸ்வதி கீர்த்தனை

*பாட்டு எண் : 55* *கீர்த்தனை : 1*

*தரு: சாவேரி* *ஆதி தாளம்*

### பல்லவி

*சாக்ஷிநாதா ஜகசாக்ஷியாய் விளங்கிய*
*சர்வ சாக்ஷிநாதா*

*[சாக்ஷிநாதா]*

### அனுபல்லவி

*மாட்சிமையான புறம்பியநகரில் வாசனே சுப்பிரகாசனே*
*தாழ்ச்சிஇல்லாமல் அன்பர்க்கருள் புரியும் தயாபரி*
*இட்சுவாகுக் குகந்த*

*[சாக்ஷிநாதா]*

### சரணம்

*ஆதியந்த மில்லாத பரஞ்சோதியே!*
*சச்சி தானந்த மூர்த்தியே*
*பாதி மதியை முடியிலணியுங்*
*காபாலியே அரவா பரணனே*
*தாதவிழ் கொன்றைமலர்த் தாள்புனைந்திடுஞ்*
*சங்கரனே உமைபங்காளனே என்றன்*
*மீதிலருள்செய்வாய் நீலகண்டனே மெய்யானதெய்வம்*
*உன்னை யல்லால் வேறுண்டோ!*

*[சாக்ஷிநாதா]*

சைவச்சுதன் மார்க்கண் டேயனுக்
கருளவே முன்பு தரணியறிய
கைவச்சுதனை உதைத்த பொற்பாதனே
மானும் மழுவுஞ் சூலமுங்
கையதிற் கொண்டு நின்னன்பர்க்கு முன்வந்து
காட்சிதந்து கடாட்சித் தருள்செய்யும்
ஐவத்திரமன் கங்காதரனே எங்களாறுமுகவன்
தந்தை யான தத்பர

[சாக்ஷிநாதா]

# இயற்றியவர் பெயர் தெரியாதவை

பாட்டு எண் : 56 கீர்த்தனை : 1

தரு : அடாணா இராகம் ரூபக தாளம்

### பல்லவி

இவனுக்குச் சரியான துரைஉலகினி லுண்டோ
இந்திரதரு இவனுக்கீடோ ஜோடோ பெண்ணே
[இவனுக்கு]

### அனுபல்லவி

யௌவனத்தில் வடிவில் கீர்த்தியில் மனம்பூர்த்தியில்
எண்ணக் கூடாததர்ம பரிபாலனத்தில் கவனத்தில்தரத்தில்
சத்சனத்தில் சொல்தவத்தினில் கரைக்கு லாகன
பிரபலயோக மொத்திடும் சிவாஜிஉத்தம வசீகரன்
[இவனுக்கு]

### சரணம்

தமிழுக்கு அகஸ்தியன் தானத்தில் நிலைகர்ணன்
தனசம்பத்துக் குபேரன்
பொறுமையில் பூமியை ஒப்பான் வாக்கினில்
அரிச்சந்திரன் சௌந்தரத்தில்
மாரன் சமரந்தனில் உபமானஞ் சொல்லக்
கூடாத தனஞ்சயன்
சமானம் தனம் அடுத்தவர்க்கும் மற்றவர்க்கும்
சொல்கவிக்கும் சொல்தருணம்
மழைமுகி லெனவே கனதன மன
மகிழனுதினமும் உதவிசெய்
[இவனுக்கு]

மச்சக் கெச்சரர் மகதர் குத்தர்ரெங்கர்
வங்கசிங்களத் தாரும்
கொச்சிப் பப்பரர் கௌடர்ட டங்கணர்
மார்வாடிகொங்கணத் தாரெல்லாரும்
வச்சிரப் பதக்கமாலை விலையில்லா நவமணிகள்
ஒருக்காலே கொணர்ந்துவைத்து
இச்சகம்புகழ் சம்ரட்சணர் துரந்தனை யென்னும்
இணையடி துணையெனவே

[இவனுக்கு]

போசன் குலச்சன்சந்திரன் பூருவடி மேருநல்ல
புண்ணிய நதி
சத்திரபதி சிவபூஜை செய்வதி லுயர்
மார்க் கண்டேயர்
மெத்தப் புகழைத் தரும் சங்கநிதி
மாசில்லாச் செழுஞ்சோதி
உலகில் எங்கும்வளரும் சிவன் பிராக்கியாதி
.அவர்நிதி தேசத்தில்
ஐவர்களும் இணையேது திகழுந் துதிசெயமும்
நியமமும் இலகிய

[இவனுக்கு]

பாட்டு எண் : 57 — கீர்த்தனை : 2

தரு : தோடி இராகம் — ஆதி தாளம்

### பல்லவி

ராமாஉன் மகிமை யொருவரா லறியப்போமோ
நிரஞ்சன நிராமய நிர்ஜீவ லோசனரகு

[ராமா]

### அனுபல்லவி

ஆமாறறிந் துலகாக்கி யளித்துமழித் தும்விளையாடி
நீமாறு படாமலே அநேகமு மாயேகமான

[ராமா]

### சரணம்

உனையன்றி யான்நின்றிட ஒருசத்தில் லாமலிருந்தும்
என்னுது யானென்று சொல்வதற் கேதுவும் நீயே!
பொன்னேயா பரணநாமம் பொருந்திவிளங்கு வதுபோல
நின்னுருவே நின்னொளியே நீயேஅப ரோட்சமான

[ராமா]

காண்பதுவும் கேட்பதுவும் கருதுவதும் முடிப்பதுமாய்
வீண்பயிலும் ஆங்காரத்தை வேருடன் களைந்து
மாண்புடைய வெயில்பரிதி மயமெனவே தெளிவித்து
நாண்பெரும் ஆன்மாவேயுன்றன் நறுமலர்த்தாளினிற் சேர்த்த

[ராமா

சின்மயமாய் நிர்மலமாய்த் தேஜோ மயமான
தன்மயமே ஆனந்த சாகர மேயாய்
உன்மயமே ஆதலினால் உபமான முறைத்திடவே
றின்மையினா லொன்மயமே ஏகமாய் நிறைந்த

[ராமா]

பாட்டு எண் : 58

தரு : தோடி இராகம்

கீர்த்தனை : 3

ஆதி தாளம்

### பல்லவி

கண்டு சேவித்தேன் மன மகிழ்ந்தேன்
கவலைகள் எல்லாம் நீங்கவே! [கண்டு]

### அனுபல்லவி

அண்டர் போற்றுந் திறமை நகர்தனிலே
அனுதினமும் வாழும்பெரிய நாயகி
எண்டிசை புகழ் தீர்க்க புரீசர்
ஈன்றெடுத்த பாலசுப்பிர மணியர் இருபாதங் [கண்டு]

### சரணம்

நாரதாதி வீணா கானங்கள் செய்ய
ரம்பைநாட்டிய நடிக்கஅந்த
பாரதி சகலகலை ஞானங்க ளெல்லாம்
பரிந்து பரிந்து படிக்கஎந்
நேரமுமயன் மணி மயவி மானங்கள்
நேர்த்தியாய் சோடிக்க மிகு
சீருடன் ஆயிர நாவாலும் ஆதி
சேஷன் துதிக்க அமரர் குடை பிடிக்க
தேவதுந்துபி முழங்க கின்னரம் எச்சரிக்கைகூற
இருக்குங் கொலு சிங்காரமும் [கண்]

அடுத்த பேருக் கெல்லாம் ஆறுதலைச் செய்யவும்
ஆறுதலையு மொழியும் அன்பர்
தொடுத்தபடி செலுத்த கருணைமழை பொழியும்
சொலிக்கும் பார்வைவிழியும் வரங்

கொடு பக்தர்களைப் பாலனஞ் செய்யவே
குறிக்கின்ற நகைவிழியும் முகங்
கடுத்துச் சூரனைச் சங்கரித்த வேலாயுதக்
கதிரொளி விழியும் தேனிதழும்
கணகணத் தொருமையாய் இத்தமிழ்மாலை
கனிந்துபாடி உறவாடிக் கொண்டாடி

[கண்டு]

தேடும் நவநிதியும் திங்கள் மாரிபொழியுந்
திறமைநகர் வாச மயில்
பேடெனும் தெய்வ யானை வள்ளிக்குகந்திடும்
பிரிய மிகுந்த நேசர்
கோடி மன்மதராய் விளங்கிய குமார
சாமி போற்று முருகேசன்
நாடு புகழ் பெரியநாயகி தீர்க்கபுரி
நாதர் உதவும் சுப்பிரமணியர்
நாகரிக மெய்யும் பன்னிரு கையும் பாதமும்
நளினமலர்த் தாளுஞ்சிலம்புங் கண்ணாரக்

[கண்டு]